Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 கார்த்திகை-08 23-11-2004 செவ்வய்கிழமை ஓசை -279

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247



# கிழக்கு மாகாணத்தில் படைக்குவிப்பு

# சோதனை நடவடிக்கைகளும் தீவிரம்

## மட்டக்களப்பில் பொலிசாரின் விடுமுறைகள் ரத்து

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டு வருவதுடன் அங்கு படையினர் சுற்றிவளைப்பு தேடுதலில் ஈடுபட்டுள்ளதுடன் வீதிச் சோதனை களும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் மட்டக்களப்பில் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை பொலிசாரின் விடுமுறைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.**

திருகோணமலையின் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலையில் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட பதற்ற நிலையினையடுத்தே மேலதிகமான துருப்பினரை சிறிலங்கா இராணுவம் அங்கு குவித்துள்ளது. யாழ்ப் பாணம் வல்வெட்டித்துறையில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் மட்டக்களப்பில் விடுதலைப் புலி களின் இரு அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்கு தல் ஆகியவற்றை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதாகக் கூறப்படுகிறது. விடு தலைப் புலிகள் மீது வலிந்து தாக்குதல் நடத்தி அவர்களை யுத் தம் ஒன்றிற்கு மீள அழைக்கும் விதமான செயற்பாடுகள் அண் மைய நாட்களில் அதிகரித்துவரும் நிலையில் இந்த பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கை வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பில் சிறிலங்காப் பொலிசாரும், இரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கெதிராக அரச ஊடகங்கள் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரம்

### கௌசல்யன் குற்றச்சாட்டு

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் அரச ஊடகங்களும் சில தனியார் ஊடகங்களும் திட்டமிட்டு பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாக புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யன் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட தராவிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 20 விடுதலைப் புலிப் போராளிகள் பலியானதாகக் குறிப்பிட்ட சில ஊடகங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் நேற்று மாலை கடும் மழை

### வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்தது

நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக ஏ9 வீதியால் பல இடங் களில் வெள்ளம் பெருக்கெடுத்து குறுக்கறுத்துப் பாய்ந்ததால் மக்கள் போக்குவரத்தின்போது பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

தற்போது பெய்வரும் கடும் மழை யினால் போக்குவரத்துச் சாலை களில் நீர் தேங்கி நிற்பதோடு வெள் ளம் பெருக்கெடுத்து வீதிகளைக் குறுக்கறுத்துப் பாய்வதால் வீதிகள் கடும்சேதமடைந்துவருவதோடு மக் கள் போக்குவரத்தின்போது பெரும் சிரமங்களையும் எதிர்நோக்கி வரு கின்றனர்.

நேற்று மாலை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக ஏ-9 விதியைக்குறுக்கறுத்து 2 அடி நீர் பாய்ந்தது. இதேபோன்று 155ஆம் கட்டைப் பகுதி,கரடிபோக்கு சந்தி, மற்றும் இரணைமடுச்சந்தி ஆகிய இடங்களிலும் நீர் வீதியின் குறுக்கே பெருக்கெடுத்து பாய்ந்

(12ஆம் பக்கம் பார்க்க)

### -வவுனியாவில் புலிகள்-படையினர் சந்திப்பு-

## மாவீரர் தினத்தன்று ஏ-9 சாலையை இரவு 12 மணி வரை திறப்பது பற்றி ஆராய்வு

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி ஏ-9 சாலையை இரவு 12 மணிவரை திறப்பதற்கு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு இருப்பதாக வவுனியா மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்துள்ளார். நேற்று மாலை வவுனியா போர் நிறுத்தகண்காணிப்புப் குழுக்காரியாலயத்தில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினரின் வேண்டுகோளுக்கு அமைய இலங்கை இராணுவத்தினருக்கும், விடுதலை புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகப் பகுதிகளில் நேற்றும் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

பல்வேறு பகுதிகளிலும் நேற்று மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. வட்டக்கச் சிப் பிரதேச மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வானது நேற்றுக் காலை 10.30 மணியளவில் இராமநாதபுரம் மாகாவித்தியாலயத்தில் தேசிய எழுச் சிப் பேரவையைச் சேர்ந்த பொன்னுத்துரை தலைமை யில் இடம்பெற்றது.

முதல் நிகழ்வாக மாவீரரின் பெற்றோர், தளபதி கள், போராளிகள், ஆசிரியர்க்ள ஆகியோர் இராம நாதபுரம் சந்தியில் இருந்து நாதஸ்வரக் குழுவினர் மற்றும் இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவி களின் வரவேற்பு நடனத்துடனும் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் காண்டீபனும் தேசியக்கொடி யினை குட்டிசிறிமோட்டார் படையணி தளபதி கோபாலும் ஏற்றினர். ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி

(12ஆம் பக்கம் பார்க்க)





வட்டக்கச்சியில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வு

## பேருந்து, ஈருருளி விபத்தில் சுன்னாகத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் சந்திப்பகுதியில் நேற்று முற்பகல் ஏற்பட்டபேருந்து, ஈருருளி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கோண்டாவிலைச்சேர்ந்த செல்லப்பா சாந்தகுமார் (வயது 48) என்பவரே இச்சம்பவத்தில் பலியானவராவார் சுன்னாகம் சந்தி நோக்கி புன்னாலைக்கட்டுவன் வீதியால் ஈருருளியில் வந்து கொண்டிருந்தவரைப் புன்னாலைக்கட்டுவன் நோக்கி அதே வீதியால் வந்து கொண்டிருந்த வட

(12ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் மின் தாக்கி இளம் குடும்பஸ்தர் பலி

யாழ்.பருத்தித்துறைப்பகுதியில் மின் தாக்கியதில் இளம் குடும் பஸ்தர் ஒருவர் உடல் கருகிப் பலியாகியுள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் பருத்தித்துறை பன்னைக் கட்டைப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சி.சிறிவிக்னராஜா (வயது 37) என்பவரே பலியானவராவர். நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்த தினால், தனது வீட்டிலிருந்த தொலைக்காட்சிப்பெட்டி பழுதடைந்து விடும் என எண்ணிய பிரஸ்தாபநபர் அன்ரனாவிலிருந்து தொலைக்காட் சிப்பெட்டியிற்கான இணைப்பைத் துண்டிக்க முற்பட்டபோது மின் தாக்கியதிலேயே இவர் பலியாகியுள்ளார். (33)




## உருவப்படம் இணைப்பு

மாவீரர் நாள் தொடர்பான வர்ணப் பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. முதல் மாவீரர் லெப். சங்கரின் வர்ணத்திருவுருவப்படம் நாளைய நாளேட்டுடன் இணைக்கப்படவுள்ளது.



## மாவீரர் நாள் நவம்பர் -27

**மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமாகி விட்டார்கள்.**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

# வன்னிப்பகுதியில் தொடரும் கன மழையினால் மக்கள் இடம் பெயர்வு ; போக்குவரத்து துண்டிப்பு

## வீடுகளின் சுவர்கள் இடிந்து வீழ்ந்தன

தற்பொழுது பெய்துவரும் அடைமழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் 6000இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளைப்பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 6180 குடும்பங்களைச் சேர்ந்த 30, 900 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளி.அரசசெயலக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் மேலும் பல குடும்பங்கள் பாதிப்பிற்குள்ளாக நேரிடலாமென அஞ்சப்படுகின்றது.

கிளி.மாவட்ட நான்கு பிரதேச செயலர்கள் பிரிவுகளிலுமுள்ள பலகிராமங்களின் வீதிகளை ஊடறுத்தும், வீதிகளாலும் வெள்ளம் பாய்வதன் காரணமாக வீடுகளை விட்டு மக்கள் வெளிச்செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது

மேலும் மழை காரணமாக மக்கள் குடியிருப்புக்கள் பல நில ஊற்றெடுத்துள்ளதுடன் பல வீடுகளின் சுவர்களும் இடிந்து விழுந்துள்ளன

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் திருநகர் தெற்கு கிராமத்தில் இரண்டு மண்வீட்டுச்சுவர்கள் நிலஊற்றின் காரணமாக முற்றாக இடிந்து விழுந்துள்ள பொழுதிலும் வீட்டில் உறக்கத்திலிருந்த எவருக்கும் எதுவித ஆபத்தும் ஏற்படாது தப்பித்துள்ளனர்.

திருநகர் தெற்கைச் சேர்ந்த த.இராஜேஸ்வரி வீட்டு இல. 1200 ச.செல்வராணி வீட்டு இல. 252 ஆகியவர்களுடைய இரண்டு வீடுகளின் சுவர்களுமே நில ஊற்றுக்காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளன.

பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் பெய்து வரும் கனமழையினால் பல கிராமங்களில் மழை நீர் உட்புகுந்து மண் வீடுகளின் சுவர்கள் இடிந்தும், பெரும் வெள்ளத்தில் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதன் போது தேராங்கண்டல் ஐயன்கன் குளம் கோட்டைகட்டியகுளம், ஆலங்குளம், புனிதன்குடியிருப்பு அனிஞ்சியன்குளம், பாண்டியன்குளம், சிவபுரம், பனங்காமம் பற்று, பூவரசங்குளம், ஒட்டங்குளம் பகுதிகளில் மழை நீர் உட்புகுந்ததால் வீடுகளின் மண் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளமையால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்போது ஒரு வாகை மரம் வீதியை மறித்து முறித்து விழுந்துள்ளது.

பெய்து வரும் கனமழையினால் வவுனிக்குளம் நீர்பாசன திணைக்களத்திற்கு உட்பட்ட குளங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது இதன்போது வவுனிக்குளம் 24அடி 4அங்குலம் 4அங்குலம் வான்பாய்கிறது. மருதங்குளம் 8அடி 11அங்குலம் 5அங்குலம் வான் பாய்கிறது. முறிகண்டிக்குளம் 9அடி 5அங்குலம் 5அங்குலம் வான் பாய்கிறது தேராங்கண்டல் குளம் 9அடி 5அங்குலம் 5அங்குலம் வான் பாய்கிறது கொல்லவிளாங்குளம் 10 அடி 2அங்குலம் 2அங்குலம் வான்பாய்கிறது ஐயங்கன்குளம் 12அடி 4அங்குலம் 4அங்குலம் வான்பாய்கிறது அம்பலப்பெருமாள்குளம் 9அடி 3அங்குலம் 3அங்குலம் வான்பாய்கிறது. கோட்ட கட்டியகுளம் 8அடி 3அங்குலம் வான் பாய்கிறது. தென்னியங்குளம் 10 அடி 3அங்குலம் 3அங்குலம் வான் பாய்கிறது. கல்விளாங்குளம், 10அடி 4அங்குலம் 4அங்குலம் வான் பாய்கின்றது. மல்லாவிக்குளம் 9அடி 11அங்குலம் பனங்காமம் குளம் 8அடி 6அங்குலம் 6அங்குலம் வான்பாய்கிறது. மழை வீழ்ச்சியின் அளவு வவுனிக்குளம் 37.3மில்லிமீற்றர் மழையும், அம்பலப்பெருமாள் குளம் 55.8மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் காணப்பட்டது. (சோ,24)



கடும் மழையினால் வட்டக்கச்சி சந்தையடிப்பகுதியில் உள்ள நாவலடிக் 'கோஸ்வே' அதிக அளவு நீரை வெளியேற்றுவதனால் பேருந்துச் சேவையும் சந்தைக்கும் வரும் வியாபாரிகள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள் என பலர் நீரினுள்தனைந்தபடியே செல்வதையும், பெருந்து ஒன்று மக்களுடன் வந்து மக்களை இறக்கிவிட்டு பாயும் நீரினால் பயனிப்பதையும் படத்தில் காணலாம். (படம் ரூபன் (12)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மத விடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபல்ய மானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்து பவர்.

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
121,2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459.
(சி-10633)


# போரூட் நிறுவன நிதி உதவியுடன் மக்களுக்கு மரக் கன்றுகள் வழங்கல்

வட்டக்கச்சி மாவடிக்கிராம பயனாளிகளுக்கு போரூட் நிறுவன நிதி உதவியுடன் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் போரூட் நிறுவனத்திட்ட இணைப்பாளர் வாணி அவர்களின் வழிநடத்தலில் 50




பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. ஒரு பயனாளிக்கு 5 தென்னை, 03 தேசி, 2பலா 2மா என 250 தென்னையும், 150 தேசியும், 100 பலா, 100மா ஆகியன வழங்கப்பட்டன. (12)

## சு.வ.ப.நோ.கூ. சங்கம், பரந்தன், வ/து
## கிளைக்குழுத் தேர்தல் - 2004
# அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு கிழக்கு)அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05 .19ஆம் திகதி1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**காலம் :- 2004.12.04 ஆம் திகதி சனிக்கிழமை**

**நேரம் :- முற்பகல் 09.30 மணி**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01. | பரந்தன் | தலைமை அலுவலகம், சு.வ.ப.நோ.கூ.சங்கம்,பரந்தன் |
| 02. | 10. | உமையாள்புரம் | தலைமை அலுவலகம், சு.வ.ப.நோ.கூ.சங்கம்,பரந்தன், |
| 03. | 04. | ஊரியான் | முருகானந்தா மகா வித்தியாலயம், |
| 04. | 17. | கல்மடுநகர் | கல்மடு அ.த.க.பாடசாலை, கல்மடு, |
| 05. | 15. | தருமபுரம் | தருமபுரம் வெதுப்பக வளாகம், |
| 06. | 09. | புன்னைநீராவி | புன்னைநீராவி அ.த.க.பாடசாலை, |
| 07. | 16. | பிரமந்தனாறு | பிரமந்தனாறு மகா வித்தியாலயம், |
| 08. | 08. | கலவெட்டித்திடல் | நாகேஸ்வரா வித்தியாலயம், கலவெட்டித்திடல், |
| 09. | 07. | புளியம்பொக்கணை | நாகேந்திரா வித்தியாலயம், புளியம்பொக்கணை, |
| 10. | 14. | பொறிக்கடவை | பரந்தன் அ.த.க.பாடசாலை |
| 11. | 12. | தட்டுவங்கொட்டி | கண்ணகி நகர், அ[illegible].க.பாடசாலை, |
| 12. | 02. | இரணைமடு மேற்கு | முரசுமோட்டை [illegible].க.பாடசாலை, முரசு, |
| 13. | 13. | குமரபுரம் | பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பரந்தன், |

**காலம் :- 2004. 12. 04 ஆம் திகதி சனிக்கிழமை**

**நேரம் :- முற்பகல் 01.00 மணி**

| | | | |
|---|---|---|---|
| 14. | 11. | ஆனையிறவு | தலைமை அலுவலகம், சு.வ.ப.நோ.கூ.ச.பரந்தன், |
| 15. | 03. | முரசுமோட்டை | முருகானந்தா மகா வித்தியாலயம், முரசுமோட்டை, |
| 16. | 05. | கண்டாவளை/ பன்றிசுட்டான். | கண்டாவளை மகா வித்தியாலயம். |

**முக்கிய குறிப்புக்கள்:-**

01. வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறிவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

02. இது சம்பந்தமான மேலதிக தக்வல்களை கிளைநிலையங்களிலும், தலைமை அலுவலத்திலும் பார்வையிடலாம்.

**செயலாளர்,**
**கரைச்சி வடக்கு, ப.நோ.கூ.ச.**
**பரந்தன்.**

(சி-10776)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பொன்னுத்துரை தயாபரன்

எமது கலாசாலை ஆசிரிய மாணவி செல்வி புஸ்பராணி அவர்களின் சகோதரன் தயாபரனின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துன்பங்களில் நாமும் பகிர்ந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

**ஆசிரிய மாணவர்கள்,**
**கோப்பாய் கலாசாலை,**
**துணுக்காய் வலயம்.**

(5299)

# பாகிஸ்தானுக்கு அடுத்த ஆண்டில் அமெரிக்கா 1500 கோடி ரூபா இராணுவ உதவி வழங்கும்

**பிரதிநிதிகள் சபையிலும் ஒப்புதல்**

(வோஷிங்டன்)

**பாகிஸ்தானுக்கு ரூ.1,500 கோடி இராணுவ உதவியை அடுத்த ஆண்டில் வழங்க அமெரிக்கா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பிரதிநிதிகள் சபையிலும் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை ரூ.19 இலட்சம் கோடி நிதி ஒதுக்கீட்டுக்கான ஒப்புதல் வழங்கியது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு இது ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த நிதி ஒதுக்கீட்டில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், துருக்கி போன்ற நாடுகளுக்கு இராணுவ உதவி வழங்குவதும் அடங்கும். சர்வதேச தீவிரவாதி பின்லேடனின் அல்-ஹைய்தா இயக்கத்தை ஒழித்துக்கட்ட அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. அமெரிக்காவின் இந்த முயற்சிக்குப் பாகிஸ்தான் ஆதரவு தெரிவித்து வருகிறது. ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லைப் பகுதி மலைப்பகுதிகளில் பதுங்கி இருக்கும் தீவிரவதிகளை பாகிஸ்தான் இராணுவம் வேட்டையாடி வருகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் பாகிஸ்தானுக்கு முன்னுரிமை கொடுத்து அமெரிக்கா நிதி ஒதுக்கி இருக்கிறது.

அதாவது, பாகிஸ்தானுக்கு ரூ.1,500 கோடி இராணுவ உதவியை அமெரிக்கா வழங்கவுள்ளது. மேலும் தீவிரவாதிகள் நடமாட்டம் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்க உதவுவது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது. இதற்காக நவீன பி.3சி ரக 8 விமானங்களை வழங்க உத்தேசித் திருப்பதாகத் தெரிகிறது.

ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், எகிப்து ஆகிய நாடுகளும் இந்த ஒதுக்கீட்டின் மூலம் இராணுவ உதவி பெறுகின்றன. ஆப்கானிஸ்தானின் தேசிய இராணுவத்தினருக்குப் பயிற்சி மற்றும் சாதனங்கள் வழங்க கூடுதலாக ரூ.250 கோடி வழங்குகிறது. கடந்த ஆண்டு ரூ.1,750 கோடி வழங்கப்பட்டது. இது ரூ.2 ஆயிரம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இஸ்ரேலுக்கு ரூ.11 ஆயிரம் கோடியும், எகிப்துக்கு ரூ.6 ஆயிரத்து 500 கோடியும் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# ஈராக் பிரதமரின் உறவினர் விடுதலை

ஈராக் நாட்டின் இடைக்காலப் பிரதமராக இருப்பவர் அலாபி. இவரது மருமகன் காசி அலாபி கடந்த 9 ஆம் திகதி பாக்தாத் நகரில் வைத்து அவரது மனைவி மற்றும் மருமகளை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர் பலூஜா நகரில் முற்றுகையிட்டுள்ள அமெரிக்கக் கூட்டுப்படையினர் வாபஸ் பெற வேண்டும். கைது செய்யப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும். இல்லையெனில் கடத்தப்பட்ட அனைவரது தலையையும் துண்டிக்கப் போவதாக மிரட்டல் விடுத்து இருந்தனர். இந்த சூழ்நிலையில் காசி அலாபியின் மனைவி மற்றும் மருமகளை மட்டும் தீவிரவாதிகள் விடுதலை செய்தனர். தற்போது காசி அலாபியையும் விடுதலை செய்து விட்டனர். இந்தத் தகவலை அரசு தொலைக்காட்சி நிறுவனமான அல் அரபியா தெரிவித்துள்ளது.



கார்க்குண்டுத்தாக்குதலின் பின்னர் அமெரிக்கப்படையினர் விட்டுச் சென்ற யுத்த டாங்கியின் முன்னால் அமெரிக்காவை எதிர்த்துக் கோசமிடும் ஈராக்கிய சிவிலியன்கள்.



ஈராக்கில் தற்கொலைத் தாக்குதலுக்கு அஞ்சிய பிரிட்டிஷ் கடற்படைச்சிப்பாய் ஒருவர் தமது சோதனைச் சாவடியில் தூரத்தில் நின்றவாறு பொதுமக்களைச் சோதனையிடுகிறார்.

-புனரமைக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்ட ஐ.நா.சபை மூலம்-

# சகல நாடுகளும் ஏற்கக் கூடிய நீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்

**பிரான்சிய அதிபர் ஜாக்சிறாக்**


(லண்டன்)

புனரமைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மூலம் சகலநாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதும் நீதியானதுமான சர்வதேச ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென பிரான்ஸ் சனாதிபதி ஜாக்சிறாக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரத்திற்கு முதலிடம் கொடுக்கும் உலகில் பிரச்சினைகள் ஏற்படுமென்றும் அவர் தெரிவித்தார். குடியேற்றவாதம் சம்பந்தமாக பிரான்சிற்கும் பிரிட்டனிற்குமிடையில் இடம் பெற்றிருந்த பகைமை முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவு பெறுவதைக் குறிக்கும் நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ள பிரான்ஸ் சனாதிபதி பிரிட்டனுக்குச் சென்றிருந்தார். அதன்போது அந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்.

மேற்கு நாடுகள் அவற்றின் கலாச்சாரப் பெறுமானங்களை உலகின் ஏனைய நாடுகள் மீது திணிக்கக் கூடாது என்று குறிப்பிட்ட அவர் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர மற்றும் நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் கருத்து வெளியிடுகையில் ஈராக்கிய யுத்தத்தின் மூலம் உலக நாடுகளின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படவில்லையென்று கூறினார்.



காபூலில் இருந்து 200 கி.மீ அப்பால் உள்ள பக்திக்கா மாகாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அமெரிக்க இராணுவத்தளத்திற்கு ஆப்கான் தேசிய இராணுவத்தினர் பாதுகாப்பளிக்க அமெரிக்கப்படையினர் அமெரிக்க தேசியக் கொடியினை ஏற்றுகின்றனர்.

# பயங்கரவாதத்திற்கெதிராகப் புதிய சட்டம்

**வெனிசுவெலா அரசு முடிவு**

வெனிசுவெலாவில் பயங்கரவாதத்திற்கு எதிராக புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவது குறித்துக் கவனம் செலுத்தப்படவுள்ளது. இதற்கான ஆலோசனையினை அந்நாட்டு சனாதிபதி கியுபோசாவேஸ் முன்வைத்துள்ளார். இதனடிப்படையில் சட்டமூலத்தை இயற்றுவதற்கான உத்தரவை சனாதிபதி அமைச்சர்களுக்கு விடுத்துள்ளார். அரச தரப்பு உயர் அதிகாரி ஒருவர் தற்கொலை கார்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து சனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# முஷாரப்பின் கருத்தை நிராகரிக்கிறார் மன்மோகன்சிங்

(இஸ்லாமபாத்)

இந்தியா, பாகிஸ்தான் இடையேயான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்தியா நீக்குப் போக்குடன் நடந்து கொள்ளவில்லை என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியிருந்த கருத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நிராகரித்தார்.

ஏதோ ஓரிரு வார்த்தைகளின் அடிப்படையில், இந்தியா மீது குற்றம் சுமத்துவது தவறு என்று அவர் இம்பாலில் ஞாயிற்றுக்கிழமை நிருபர்களிடம் கூறினார். பிரச்சினையைத் தீர்க்க இரு நாடுகளுமே உண்மையான அக்கறை காட்ட வேண்டும். பாகிஸ்தான் பிரதமர் செளகத் அஸீஸ் விரைவில் இந்தியாவுக்கு வரவுள்ளார். அவருடன் நடக்கவுள்ள பேச்சுப் பயனுள்ளதாக இருக்கும். பேச்சுவார்த்தை மூலம் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. என்றார் பிரதமர் மன்மோகன்சிங்.

# சீன இரும்புச்சுரங்கத்தில் தீ விபத்து 73 தொழிலாளர் உடல் கருகிப் பலி

(பீஜிங்)

சீனாவின்-ஹெபிநகரிலுள்ள இரும்புச் சுரங்கங்கள் ஐந்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 73 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரும்பு சுரங்கத்தில் தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டு இருந்தபோது ஒரு சுரங்கத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. அங்கிருந்த மின்சார வயர் வழியாகத் தீ வேகமாக அருகிலுள்ள 4 சுரங்கங்களுக்கும் பரவியது. இதில் வேலை பார்த்துக் கொண்டு இருந்த 73 பேர் தீயில் கருகிப் பலியானார்கள். இவர்களில் 45 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு விட்டன. 28 பேரின் உடல்களைக் காணவில்லை.

சீனாவில் வடகிழக்குப் பகுதியில் ஹெபி என்ற இடம் உள்ளது. இங்கு ஏராளமான சுரங்கங்கள் உள்ளன.சீனப் பொருளாதாரத்தை உலக அளவில் தூக்கி நிறுத்தக் கூடிய அளவிற்கு இந்த சுரங்கங்களில் இருந்து அதிக அளவு கனிமப் பொருட்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. இதனால் ஹெபி நகரில் அடுத்தடுத்து பலசுரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



ஐவரிக்கோஸ்டின் புதிய இராணுவத்தளபதி பிலிப் மங்கோ (இ) பழைய இராணுவத்தளபதி மதியால் டோவுடன் (வ) கை குலுக்குகின்றார்.

-யுரேனியம் செறிவூட்டும் பணிகுறித்து-

# ஐரோப்பிய யூனியனின் காலக்கெடுவை மதித்து நடக்கப் போவதாக ஈரான் அறிவிப்பு

(தெக்ரான்)

யுரேனியம் செறிவூட்டுவதை நிறுத்துவதற்கு ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள இதுவரையிலான காலக்கொடுவை மதித்து நடக்கப் போவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

தெகிரானில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஈரானிய வெளியுறவு அமைச்சர் செய்தித் தொடர்பாளருக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.


ஈரானின் யுரேனியம் செறிவூட்டும் பணியை அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் அணுவாயுத தயாரிப்புடன் சம்பந்தப்படுத்தி ஈரான் மீது அழுத்தங்களை மேற்கொண்டுவருவது தெரிந்ததே.

# தருமபுரம் அரசினர் வைத்தியசாலையில் போராளிகள் சிரமதானப் பணி

(அலுவலகசெய்தியாளர்)


**தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு நிதித்துறைப் போராளிகள் தருமபுரம் வைத்தியசாலையில் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.**

நேற்று முன்தினம் தருமபுரம் அரசினர் வைத்தியசாலையில் 100 இற்கு மேற்பட்ட போராளிகள் சிரம தானப்பணியில் ஈடுபட்டனர். வைத்தியசாலை வளாகம், வைத் தியசாலைக்கிணறு, நோயாளர் விடுதிகள் என்பன சுத்தம் செய் யப்பட்டதோடு அங்கு அமைந்துள்ள கோயிலுக்கு வர்ணம் தீட்டும் பணியினையும் நீர் தேங்கி நின்ற கிடங்குகளை மண்போட்டு நிரப் புதல், வேலிகளைப்புனரமைத்தல் போன்ற பணிகளையும் சிறப்பாகச் செய்தனர். காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம்பெற்ற சிரமதானப்பணியில் ஆண்,பெண் போராளிகள் என இருபாலரும் கலந்துகொண்டதோடு பணியில் உற்சாகத்துடனும், மகிழ் வுடனும் ஈடுபட்டனர். இவ்வாறு சிறப்பாக சிரமதானப்பணியில் ஈடு பட்ட போராளிகளுக்கு தருமபுரம் பிரதேச மக்களும் அவ்வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி, பணியாளர்கள் எனப் பலரும் பாராட டினையும் மனமார்ந்த நன்றிகளை யும் தெரிவித்தனர். (ச,தீ,)(10)



முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்ட பத்தினை வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவினை வெட்டித்திறந்து வைப்பதையும் அருகில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் க.கரிகாலன், முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தர்மலிங்கம் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (படம்: சகிலா)

# நீர்க்குழாய்கள் வந்து 6 மாதங்களாகியும் வீதிப் புனரமைப்பு பணி இடம்பெறவில்லை!



(அலுவலகசெய்தியாளர்)

நெடுங்கேணியிலிருந்து ஒலுமடு ஊடாக பட்டிக்குடியிருப்பு செல் லும் பிரதான வீதி நீண்டகாலமாக எந்தவித புனரமைப்பும் இன்றி காணப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இவ் வீதி யால் பயணிக்கும் மக்கள் தொகை யும் அதிகம். இதனால் வாகனப் போக்குவரத்து உட்பட அனைத்து போக்குவரத்தும் சிரமத்தின் மத்தியிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் இவ்வீதியைப் புனர மைப்புச் செய்வதற்கென வீதியி லுள்ள பாலங்களுக்கு அருகாக நீர்க்குழாய்களை போட்டிருப்பத னால் அதுவும் மக்களுக்கு ஒரு தடையாக விளங்குகின்றது. சுமார் ஆறு மாதகாலமாக போடப்பட்ட மேற்படி நீர்க்குழாய்கள் இன்று வரைக்கும் பயன்படுத்தப்பட வில்லை.

இதனால் நெடுங்கேணியிலி ருந்து சம்மளங்குளம் வரை செல் லும் மக்கள் பேருந்துஒலுமடுவுடன் திரும்புகின்றது. இதனால் அதற்கு அப்பால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொண்டு வருவதை காணமுடி கிறது. (கு.ச)

# மாவட்ட வைத்தியசாலையில் பல் வைத்தியர் இல்லை!

(முல்லை)

முல்லை நகரில் அமைந்துள்ள முல்லை மாவட்ட வைத்திய சாலையில் பற்சிகிச்சைக்கான வைத்தியர் இல்லாததினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதாக தெரிவித்தனர்.

இவ்வளவு காலமும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை அளித்து வந்த வைத்தியர் தற் போது நெடுங்கேணி வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஆனால் இன்று வரை முல்லைத் தீவு வைத்தியசாலைக்கு பற் சிகிச் சைக்கான வைத்தயரை நியமிக்க ப்படவில்லை. இதனால் பற்சிகிச் சைக்கான மக்கள் வவுனியாவிற்கும் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கும் பெரும கஷ்டத்திற்கு மத்தியில் சென்று வருகின்றனர்.

*-கிளி. திருநெறிக்கழகம் நடாத்திய-*

# சைவநெறி போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநெறிக் கழகத் தினரால் கிளிநொச்சி மாவட்ட பாட சாலைகளுக்கிடையில் நடாத்தப் பெற்ற சைவநெறிப் போட்டிப் பரீட் சையில் சிறப்பு மற்றும் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரி சில்களும் சான்றிதழ்களும் வழங் கிக் கௌரவிக்கப்பெற்றது.

மேற்படி நிகழ்வு நேற்று முன் தினம் பிற்பகல் 2.00 மணிக்கு திரு நெறிக்கழகத் தலைவர் வே.மகா லிங்கம் தலைமையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற் றது.




நிகழ்வில் மகாதேவ ஆச்சிரம தவத்திரு கணேசானந்த சுவாமி கள், தவத்திரு பிரகாஸ் மயா னந்தா சுவாமிஜி மற்றும் திரு நெறிக்கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய துடன் மாணவர்களுக்கான பரிசில் களையும் வழங்கிக் கௌரவித்தனர். மேற்படி போட்டிப் பரீட்சையில் 97 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதி யில் முதலாமிடத்தினைப் பெற்ற இராமநாதபுரம் மகாவித்தியாலய 11ஆம் ஆண்டு மாணவி செல்வி க.தேனுகாவிற்கு முன்னாள் பாரதி வித்தியாலய அதிபர் அகனகரத்தினம் தங்கப்பதக்கம் அணிவித்து பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

அதே போன்று பரீட்சை யில் சித்தியெய்திய மாணவர் களுக்கு நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் பரிசில்க ளையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தனர். மேற்படி நிகழ்வில் வைத்து 2004ஆம் ஆண்டு கிளி. மாவட்டத்திலிருந்து விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்யப்பெற் றுள்ள முதலாம் நிலைமாணவன் இராசு இளங்கோ (கிளி.மத்திய கல் லூரி) கலைப்பிரிவில் முதலாவது நிலையில் தெரிவுசெய்யப்பெற்ற மாணவி சி.அருணா (வட்டக்கச்சி ம.வி) ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இந்து ஆலயங்களை மட்டும் அகற்ற முயல்வது நீதியான நடவழிக்கை அல்ல

## -க. துரைரட்ணசிங்கம் எம்.பி. கண்டனம்

(திருமலை)

திருகோணமலையின் கடற்கரை யோரமாக எத்தனையோ கடைகள், குடியிருப்புகள் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டு சூழல்பாதிப்பை ஏற் படுத்திவருகின்ற இத்தருணத்தில் அரைநூற்றாண்டுக்கு மேலாக இந்து மக்களால் வழிபட்டு வரும் உவர்மலைப்பகுதியில் அமைந் துள்ள சமுத்திர ஸ்ரீ மகாவிஷ்ணு தேவாலயத்தையும் விஸ்வரூப ஹனுமான் ஆலயத்தையும் மாத் திரம் அகற்றும்படி கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உத்தர விட்டுள்ளது நீதியான நடவடிக்கை யாகாது இவ்வாறு திருகோண மலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் சிறிலங்காவின் கடற்றொழில் மற் றும் நீரியல் வளத்துறை அமைச் சின் கீழ்வரும் கரையோரப் பாது காப்புத் திணைக்களப்பணிப்பா ளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரி வித்துள்ளார். இவ்வாலயங்களை அகற்றும்படி உத்தரவிட்டமை தொடர்பாக உவர்மலை கிழக்கு கடலரசி மீனவர் கூட்டுறவுச்சங் கத்தின் தலைவர்,ஸ்ரீவிஸ்வரூப ஹனுமான் கோயில் சபையின் செயலாள் ஆகியோர் செய்த முறைப் பாட்டை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் தனது எதிர்ப்பை கரையோரப் பாது காப்புத் திணைக்களப் பணிப்பாள ருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள் ளார்.

"இரு இந்து ஆலயங்களும் ஐம் பது வருடங்களுக்கு மேலாக அந்த இடங்களில் உள்ளன. ஓலைக் கொட்டிலில் மரநிழலில் விஷ்ணு, அனுமான் சிலைகள் வைத்து வணங்கப்பட்டு வந்தன. வன் செய லின் போது மக்கள் இடம்பெயர்ந் தனர். மற்றும் இயற்கை அனர்த் தங்களால் கோயில்கள் அழிவுற்றன. மீளக்குடியமர்ந்த மக்கள் முதலில் அழிந்துபோன இக் கோயில்களைக் கட்டினர். கடலுக்குச் செல்வதற்கு முன்பு இப்பகுதி மீனவர்கள் இக் கோயில்களை வழிபட்டே செல்வது வழக்கம். எனவே கரையோரப்பாது காப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சட்ட விரோதக் கட்டடங்களை விட்டு இவ் விரு கோயில்களை மாத்திரம் அகற்றும்படி கோருவது நீதியான செயல் அல்ல. எனவே கரையோரப் பாதுகாப்புச்சட்டத்தை நீதியான முறையில் நடைமுறைப்படுத்தும்படி மக்கள் வலியுறுத்துகின்றார்கள்" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். (25)



வவுனியாவில் நடைபெற்ற சாரணிய ஆசிரியர்களுக்கான சின்னம் சூட்டுவிழாவில் மன்னார் மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர் இராஜேந்திரம், ஆசிரியர் ஒருவருக்கு சின்னம் சூட்டுவதையும், சாரணிய ஆணையாளர்களுடன் சாரணிய ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

படம்: ஆறு,சுபாஸ்கரன் (வவுனியா செய்தியாளர்)

# ஊடகவியலாளர் கருத்தரங்கு

(மன்னார்)

மன்னாரில் பத்திரிகை முறைப் பாட்டு ஆணைக்குழுவினர் கடந்த சனிக்கிழமை வருகை தந்து ஊடக வியலாளருக்கு கருத்தரங்கொன்றை நடத்தினார்கள். இக்கருத்தரங்கு மன்னார் வாழ்வோதயத்தின் கேட் போர் கூடத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு மன்னார் வாழ் வோதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுராஜா தலைமை வகித்தார். சிறிலங்கா பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம ஆலோ சகர், நிறைவேற்று அதிகாரி, சட்டத் தரணிகள், மன்னார் மாவட்ட பத் திரிகை நிருபர்கள் உட்பட 50 இற் கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதன் போது பத்திரி கையாளர்க ளின் முக்கிய அம்சமாக சமாதா னம், நடுநிலைமை, நேர்மைச் செயற்பாடுகள், ஒழுக்கம் போன்ற வற்றையும் கருத்திற் கொண்டு உயா கௌரவத்தோடு செயலாற்ற வேண்டு மென இச் செயலமர்வில் பல விளக்கங்கள் வழங்கப்பட்டன. (மி)

### பயிற்சி வகுப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாவடிக் கிராமத் தில் நெற் செய்கைக்குரிய பயனா ளிகளுக்கு அண்மையில் இராம நாதபுரத்தில் அமைந்துள்ள கிளி. கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தில் பயிற்சி வகுப்பு இடம் பெற்றது. "போரூட்" நிறுவன நிதி உதவி யுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவில், கடன் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு பயிற் சியினை விவசாய போதனாசிரியர் இ.பிரபாகரன் வழங்கினார். (12)

# பருத்தித்துறையில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள புனித நகர் அகதிமுகாமிற்கு தற்காலிக வசதிகள்

–யூ.என்.எச்.சி.ஆர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ள பருத்தித்துறை புனிதநகர் அகதி முகாமில் தற்காலிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அகதிகளுக் கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) நடவடிக்கை எடுத்துள்ளது.**

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம்பெயர்ந்து யுத்த நிறுத்த சூழ்நிலையிலும் கூட படையினரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக மீளக்குடியமர முடியாது இவ் அகதி முகாமில் வாழ்ந்து வருவோர் எதிர் கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே அக திகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் தானிகராலயம் இதற்கான நட வடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற் கட்டமாக இவ் அகதி முகாமில் 70 பொது மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க இவ் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. (33)



கொடிகாமம் திருநாவுக்கரசு பாடசாலையில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் தேசியக்கொடியினை ஏற்றும் யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் அவர்கள். (28)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு முதியோர் இல்லம் சிறுவர் பராமரிப்பு இல்லங்களுக்கு உணவு, உடுபுடவை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினமான எதிர்வரும் 25,26,27 ஆம் திகதி யாழ். குடாநாட்டில் உள்ள முதியோர் இல்லங்கள், சிறுவர் பராமரிப்பு இல்லங்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கவும் உடுபுடவைகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர், தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், பாடசாலை மாணவர்கள்,பொது அமைப்பினர் ஆகியோர் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்..

இவ்வாறான உணவு உடுபுடவை வழங்கலுக்கான முன்னேற்றப் பாடான நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (33)

# தேசியத் தலைவரின் பிறந்தநாளன்று 150 சிறார்களுக்கு சேமிப்புக் கணக்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். சாவகச்சேரி பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளில் பயின்று வரும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்கள் 150 பேரிற்கு வங்கி சேமிப்புக்கணக்குகளை ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ தேசியத்தலைவரின் சிந்தனைகளுக்கு ஏற்ப தாயகப் பகுதி வாழ்சிறார்களின் எதிர் காலத்தை வளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஓர் அம்சமாகவே இவ்வாறு சாவகச்சேரி பிரதேசத்தில் வாழும் வறுமைக் கோடடிற்குக் கீழுள்ள சிறார்களுக்குச் சேமிப்புக்கணக்குகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# வதிவிடப்பாஸ் முறை புங்குடுதீவில் நீக்கம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மக்களுக்கு வதிவிடப்பாஸ் முறை நீக்கப்பட்டுள்ளதாகப் படைத்தரப்பு அறிவித்திருக்கிறது.

புங்குடுதீவு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அனைவரும் வதிவிடப்பாஸினைப் பெற்றிருத்தல் அவசியம் எனவும் அவ்வாறு வதி விடப்பாஸ் பெறாதோர் புங்குடுதீவுப் பகுதியில் தங்கமுடியாது எனவும் படையினர் இது வரை காலமும் வற்புறுத்தி வந்தனர்.

இது குறித்து விசனமடைந்த அப்பகுதிமக்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் முறையிட்டிருந்தனர். இதனால் ஏற்பட்ட பல்வேறு விதமான அழுத்தங்களையும் தொடர்ந்து புங்குடுதீவு மக்களுக்கென தம்மால் விதிக்கப்பட்டிருந்த வதிவிடப்பாஸ் நடைமுறையை நீக்கிக் கொள்வதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக அறிவித்துள்ளனர். (33)

# கைதடி, சாவகச்சேரி, கொடிகாமத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் பிரதேசங்களில் நேற்று மூன்று இடங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

சாவகச்சேரி கந்தசாமி கோவில் முன்றலில் விசேடமாக அமைக் கப்பட்ட விசேட பந்தலில் இருந்து மாவீரர்களின் பெற்றோர், பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அழைத் துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதேபோல் கொடிகாமத்தில் மாவீரர்கள் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், கைதடி பிரதேசத்திற்கான மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச அரசியல் பொறுப்பாளர்கள், தேசிய எழுச் சிப்பேரவைப் பொறுப்பாளர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மாதர் சங்கங்கள், வணிகர் மன்றங்கள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். (28)

# சைவபரிபாலனசபை பேச்சுப்போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் அறிவிப்பு

கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சைவபரிபாலன சபையால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் பரிசுபெறுவோர் விபரம் சைவபரிபாலன சபை தேர்வுச் செயலாளரால் வெளியிடப்பட்டது.

கீழ்ப்பிரிவு:-

முதலாம் இடம் செல்வன்-ஜெயராசா ஜெய மாருதி கிளி. இராமநாதபுரம் மகா வித்தியாலயம் , இரண்டாம் இடம் செல்வன் கணநாதன் ஊஷாந்தன் யா.இந்துக்கல்லூரி , இரண்டாம் இடம் செல்வி-அ.சிறோமி யா.வேம்படி மகளிர் கல்லூரி.


மத்தியபிரிவு:-

முதலாம் இடம் செல்வி ஹம்சினி கேதீஸ்வரக்குருக்கள் யா.வேம்படி மகளிர் கல்லூரி , இரண்டாம் இடம் செல்வன் யோ.சுதாகரன் யா.யூனியன் கல்லூரி , மூன்றாம் இடம். செல்வி இமாஜினி வீரவாகு யா.ஸ்கந்த வரோதயாக் கல்லூரி.

மேற்பிரிவு:-

முதலாம் இடம் செல்வி. புஸ்பனா பேரம்பலம் யா.வேம்படி மகளிர் கல்லூரி , இரண்டாம் இடம் செல்வன் தெய்வேந்திரம் செந்தூரன் யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி , மூன்றாம் இடம் செல்வி தாரணி ஸ்ரீபாலச்சந்திரன் யா.இந்து மகளிர் கல்லூரி , மூன்றாம் இடம் செல்வி வி.மதிவதனி கிளி.இந்து மகாவித்தியாலயம் இவர்களுக்கு வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை விழாவில் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

முதலாம் இடத்தைப் பெற்றோருக்கு தங்கப்பதக்கமும், இரண்டாம்இடத்தைப் பெற்றோருக்கு வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் இடத்தைப் பெற்றோருக்கு வெண்கலப்பதக்கமும் வழங்கப்படவுள்ளது எனத் தேர்வுச் செயலர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.



சாவகச்சேரி அபிவிருத்தி சபைக்கூட்டம் நடைபெற்ற பொழுது படத்தில் முன்னாள் பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் சாவகச்சேரி நகரமருத்துவர், அம்பிகைபாகன் மற்றும் உறுப்பினர்கள். (28)

# 3500 அரச ஊழியர்களுக்கு சனவரியில் இடமாற்றம்

(கொழும்பு)

3500 அரச ஊழியர்கள் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

அதற்கான சுற்று நிருபங்களும் சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 53 வருடங்கள் பூர்த்தியாகியவர்களுக்கு இடமாற்றம் கிடையாது என சட்டம் இருந்தாலும் ஊழியர்களின் நலன் கருதி அவர்களுக்கும் இதில் விதிவிலக்கு அறிவிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

## சிரமதானப்பணி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் சந்தைப்பகுதி வர்த்தகர்களால் சந்தை வளாகமும், வெளிப்புறமும் கடந்த சனிக்கிழமை மதியம் 1.00 மணிதொடக்கம் மாலை வரை மாவீரர் நாளை முன்னிட்டு சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. (12)

# தற்போதைய வரவு–செலவுத் திட்டத்தால் மக்கள் இன்னல்களை எதிர்கொள்வர்

–எஸ். பி. திசநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

லிபரல் முறையிலான பொருளாதார முறையொன்றுக்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சித்தபோது, அது தற்போது சனநாயக சோசலிச முறையைச் சார்ந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை சோசலிசமுறைக்கு இட்டுச்சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாடு அழிவுகளை எதிர்நோக்கியதாக பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்முறை தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினால் எதிர்காலத்தில் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுமென்று தெரிவித்தார்.

இதேவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டி.யூ.குணசேகர சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் இம்முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதாக கூறினார். மேலும் கூறுகையில் யார் எதனைக் கூறிய போதிலும் இந்த வரவு செலவுத் திட்டம் சோசலிச முறையிலான ஒன்றல்ல வென்றும் அவர் மேலும் கூறினார்.

## கண்காட்சி

(நல்லூர்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஏழாலை பாடசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

புதன்கிழமை காலை முதல் பிற்பகல் 5.00 மணிவரை பெற்றோர்களுக்கான நூலகக் கண்காட்சியும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (41)

# தற்காலிக பாலத்தால் உருவாகியுள்ள நெருக்கடிகளைத் தவிர்க்க வழி செய்க!

(அலுவலகசெய்தியாளர்)

**கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து இரத்தினபுரம் செல்லும் வீதியில் உள்ள தற்காலிக பாலத்தால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும்நெருக் கடிகளுக்குள்ளாகி வருகின்றதோடு விபத்துக்களும் நடைபெறுகின்றன.**

மேற்படி தற்காலிக பாலத்தில் இரத்தினபுரத்திலிருந்து வரும் போது பாலத்தில் ஏறுவதற்கு போடப்பட்ட சாய்வுப் படி மிகவும் செங்குத்தாகவும், நேரின்றியும் காணப் படுகின்றது. இதனால் உந்துருளிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பனவற்றை மேல் ஏற்றும் போது வழுக்கி விழும் சம்பவங்கள் பல இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் மிகவும் நெருக்கமான பாலத்தில் ஒருவரை ஒருவர் விலத்திப்போக முடியாமலும் சிரமப்படுகின்றனர். மேலும் இரத்தினபுரம் பகுதியிலிருந்து வந்து பாலத்திற்கு ஏறுவதற்கு முன் 10 மீற்றருக்குள் வீதியில் குறுக்கா கப்பாரிய குழி ஒன்றும் காணப்படுகின்றது. வீதியை ஊடறுத்துப் பாயும் நீர் பாரிய குழியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பயணிப்போர் நீரினுள் விழுந்து எழும்புவதையும் காணமுடிகின்றது.

இதனால் அப்பகுதியில் மழை அதிகமாக பெய்யும் வேளை விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி பகுதியில் பாலம் ஒன்று அமைக்கும் பணிகள் மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத தக்கது.

தற்காலிகமாக அமைக்கப்பட்டபாலத்தினால் மட்டுமே கிளி நகரிற்கான போக்குவரத்துக்கள் கடும் மழைவேளையில் இடம்பெற்று வரும் நிலையில் இப்பாலத்தில் ஏறும் சாய்வுப பகுதி இலகுவாக பயணிக்கக்கூடிய வகையிலும் வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய பள்ளத்தை நீர்க் குழாய்கள் இட்டாவது சீர் செய்வதன் மூலமும் போக்குவரத்தை ஓரளவுக்கேனும் இலகுவாக்க முடியும் என்பதை சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.(கு,ச)



பாலத்தில் ஏறப்படும்பாடு



நீர் பாய்வதால் உருவான பள்ளம்

## நீரோடைக்குள் வான் வீழ்ந்தது ஏழு பேர் பரிதாப மரணம்!

### -அம்பாறை -கண்டிவீதியில் சம்பவம

(மட்டக்களப்பு)

அம்பாறை - கண்டி வீதி வக்கியல்லவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 2 பெண்கள் 2 குழந்தைகள் உட்பட 7 பேர் பலியானார்கள்.

அம்பாறையிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற வானொன்று பாதையை விட்டு விலகி நீரோடைக்குள் விழுந்தமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## டிசம்பர்–15 வரை தொடர்மழை புயல் அபாயமும் உள்ளது

### வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 15 ஆம்திகதி வரை நாட்டில் தொடர்ச்சியான மழை பெய்வதுடன் புயல்காற்று வீசும் அபாயம் உள்ளதெனவும் புயல்காற்று ஆரம்பமா வதற்கு ஆறு நாட்களுக்கு முன்னதாக நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்கள தலைவர் ஜி.எச்.பி.தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்திய வளிமண்டல திணைக்களத்துடன் இணைந்து செயலாற்றப் போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## களவாக கால்நடைகளைக் கடத்தி இறைச்சியாக்கி விற்றவர் கைது!

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச புத்துவெட்டுவான் பகுதியில் களவாக கால்நடைகளை இறைச்சியாக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் காவல்துறையினரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தலைமையிலான காவல்துறையினர் மேற் படி சந்தேக நபரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (24)

## நெடுங்கேணி நகர்ப்பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி நகர்ப்பகுதி எங்கும் கட்டாக்காலி நாய்களின் தொகை அதிகரித்துக் காணப்படு கிறது.

மேற்படி நகரில் கட்டாக்காலி யாக திரியும் நாய்களின் தொல்லை யானது வீதிகள் எங்கும் அதிகரித் துள்ளதுடன், வைத்தியசாலை வளாகத்திலும் நாய்களின் தொகை அதிகரித்துள்ளதனால் பெரும் சிரமம் ஏற்பட்டு வருவ தாக வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவித்தன.

மேலும் கட்டாக்காலி நாய்கள் கோயில்கள், பொது இடங்கள், சந்தைப்பகுதி என்பவற்றிலும் பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.நெடுங்கேணி நகர்ப்பகுதியில் கட்டாக்காலி நாய் களைக் கட்டுப்படுத்த எந்தவித நட வடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(கு,ச).

## மட்டக்களப்பு நகரைச் சுற்றிவளைத்து சிறிலங்காப் படையினர் பாரிய தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சிறிலங் காப் பொலிசாரும் இராணுவத் தினரும் இணைந்து நேற்றுக் காலை பாரிய தேடுதல் நடவடிக்கை யொன்றில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதல் நடவடிக் கையில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் ஈடுபட்டதாக சிறிலங்கா இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தேடுதல் நடவடிக்கையின் போது இனம் காணப்பட்ட 6 வீடுகளும் சோதனைக்குட்படுத் தப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு வீட்டு வளவினுள் இருந்து கைக் குண்டு ஒன்று படையினரால் மீட்கப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னுமொரு பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் செயற்பட்ட ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது மட்டக்களப்பு பிரதேசத் தின் பாதுகாப்பு மேலும் பலப் படுத்தப்பட்டுள்ளதோடு திடீர் சோதனைச்சாவடிகளும் அமைக் கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு சிறிலங்கா பொலிஸ் தலைமை யகத்தின் குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

## நோயாளிகளிற்கு உதவுக!

(பூநகரி)

கட்டி முடிக்கப்பட்ட பூநகரி கௌதாரி முனை ஆரம்ப சுகாதார நிலையத்தை வெகுவிரைவில் திறந்து கல்முனை கௌதாரி முனை வினாசியோடை மண்ணித்தல கிராமத்தில் உள்ள நோயாளிகளுக்கு உதவுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


இவ் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்காததால் சிறிய புண்ணிற்குக் கூட 12 கிலோமீற்றர் வந்து கட்டம் I வைத்தியசாலையில் மருந்து கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (34)


## கால்நடைகளின் கழிவுகளை அகற்றிய பின் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் அவலம்!

### -நிலைமையைச் சீர் செய்ய நடவடிக்கையில்லை

(அலுவலக செய்தியாளர்)

மழை வெள்ளத்தின் தாக்கத்தினையும் பொருட்படுத தாது பாடசாலைக்குச் செல்லும் மாணவ மாணவிகள் வகுப்பறைகளிலுள்ள கட்டாக்காலி ஆடு,மாடுகளின் எச்சங்களைத் துப்புரவு செய்த பின்பே பாடநெறிகளைத தொடரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை கிளிநொச்சிப் பிரதேச பாடசாலைகள் சிலவற்றில் தோன்றியுள்ளதனை அவதானிக்க முடிகிறது.





கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு நேற்றுக்காலை நேரில் சென்ற எமது செய்தியாளர் மாணவர்களால் வகுப்பறை களிலும், தளபாடங்களிலும் இருந்த கட்டாக் காலி ஆடு,மாடுகளின் எச்சங்களை அகற்றிக் கொண் டிருப்பதனை நேரில் காணக்கூடியதாகவிருந்தது.

இது குறித்து மேற்படி கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடிய பொழுது தெரிவிக்கையில்;

தினமும் கல்லூரிக்கு சமுகம் கொடுத்ததும் முதல் வேலையாக மேற்படி பணியினையே பலகாலமாக மேற்கொண்டு வருவதாகவும் இதன்பின்பே வகுப் பறைகளில் பாடங்கள் ஆரம்பிக்கப்படுவதாகவும் தெரிவித்த மாணவர்கள் சில வேளைகளில் தங்கள் சீருடைகளில் கூட அழுக்குப்படியநேரிடுகின்ற பொழு திலும் அச் சீருடையுடனேயே அன்று முழுவதும் கல்லூரியில் இருந்து கல்வி கற்பதுடன் எச்சங்களை அகற்றிய பொழுதிலும் வகுப்பறைகளில் எச்சங்களின் துர்நாற்றம் அகலாத நிலையிலுமே வகுப்பறைகளில் இருந்து கல்வி கற்கவேண்டிய அவலநிலை சகல மாணவர்களுக்கும் ஏற்பட்டுள்ளதென கவலையுடன் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கட்டாக்காலி ஆடு,மாடுகளை உரிமையாளர்கள் கட்டுப்படுத்த முன்வந்து மாணவர் களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவலத்தை நீக்க முன் வருவார்களா? அல்லது பாடசாலையின் சுற்று வேலி களை சீராக அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரு வார்களா? இந்த நிலை சீர செய்யப்படும்வரை கிளி இந்துக கல்லூரி மாணவர்களுக்கு இவ் அவல நிலை தொடர் கதையாகவே அமைவதாகிவிடுமென மாணவர்கள் தங் கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். (சோ)

## களவாக மணல்ஏற்றியோர் கைது!

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் அனுமதியின்றி ஐயங்கன் பகுதி யில் களவாக மண் அகழ்வை மேற்கொண்ட இரண்டு உழவு இயந்திரங்களும் அதன் உரிமை யாளர் இருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு துணுக்காய் காவல் பணிமனையினரால் மேற்படி நபர் கள் கைது செய்யப்பட்டு விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

## பயிற்சி பெறும் பட்டதாரிகளை வசப்படுத்த ஜே.வி.பி திட்டம்

(கொழும்பு)

வேலை பயிலும் பட்டதாரிகளை ஜே.வி.பி தனது கட்சியில் இணைத்துக் கொள்வதற்கு திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது.

பட்டதாரி ஒன்றியம் என்ற பெயரில் தொழிற்சங்கமொன்றை ஆரம்பித்து பட்டதாரிகளை அச்சங்கத்தில் அங்கத்தவர்களாக்குவதற்கு ஜே.வி.பி மறைமுகமாகச் செயற்பட்டு வருகின்றதெனவும் ஒவ்வொரு அங்கத்தவர்களிடமும் மாதம் ஒன்றிற்கு ரூபா 50 அங்கத்துவ பணம் அறவிடுவதாக ராவய செய்தி வெளியிட்டுள்ளது.




# விதிமுறைகளைக் கருத்தில் கொள்ளாத போட்டி

மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வாக வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற மாவீரர் வெற்றிக் கிண்ணங்களுக்கான சுற்றுப் போட்டிகள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்த விடயம். மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப் படும் சிறந்த அணிகளே தமிழீழ ரீதியில் நடாத்தப்படுகின்ற மாபெரும் விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ள முடியும் என்பது விதி முறை. இவ்வாறிருக்கையில் கடந்த இரு தினங்களாக நடைபெற்று வரும பலத்த மழையோடு கரைச் சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டமும், மென்பந்தாட் டமும் ஆரம்பமாகி நடைபெற்றன. மென்பந்தாட்டம் கிளி.கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இலைம றைகாயாக உள்ள பல மென்பந் தாட்ட அணிகள் இந்தப் போட்டி யில் பிரதிநிதித் துவப்படுத்தியி ருப்பது வியப்புக்குரியது. 21 அணிகள் இப்போட் டிக்கு விண்



ணப்பித்து மிகத்திற மையாகவும் விளையாடி வருகின்றன. இருப் பினும் இவ்வீரர்கள் தமது உச்ச திறனை வெளிப் படுத்த முடியாத நிலையை காலநிலை ஏற்படுத் தியிருந்ததை அவதானிக்க முடிந்தது. அத்தோடு ஆட்ட மிழப்புக்கான சந்தர்ப்பத்தை அதி கமேகாண முடிந்தது. இதன் கார ணமாகப் பல அணிகள் விசனப்பட் டுக் கொண்டமையும் மத்தியஸ்தர் களோடு முரண்பாட்டை வளர்த்து அவர்களைக் கொச்சைப்படுத் தியமையையும் காணமுடிந்தது. இந்நிலைமை உண்மையில் கால நிலை சீர்கேட்டால் ஏற்பட்டதேயன்றி வேறொன்றுமில்லை. இந்நிலைமை உதைபந்தாட்டத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை யை காணமுடிகிறது. உதைபந்தாட் டத்தைப் பொறுத்தமட்டில் அண் மைய காலங்களில் பல்வேறு பலம் பொருந்திய அணிகள் உரு வாகி வளர்ந்துள்ளமையும் உதைபந் தாட்ட நுட்ப முறைகளை ஓரளவு தம் முள் உறிஞ்சிக்கொண்டு நிதான மான பந்துப்பரிமாற்றங்களில் ஈடுபடும் அணிகள் பல காணப்படு கின்ற கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அணிகள் பலதத மழையோடும் வெள்ளத்தோடும் போட்டி போட்டதை அவதானிக்க முடிந்தது. உதைபந் தாட்டத்தைப் பொறுத்த மட்டில் மைதானம், உபகரணம், பந்து என்பன முக்கியமான விதிகளுள் சேர்க்கப்பட்டதாகும். இந்த நிலையில் இம்மூன்றும் வீரர்க ளுக்கு இடையூறாகக் காணப்பட் டது. அதாவது மைதானம் வெள் ளத்தால் நிரம்பியும், பந்தானது நீரினால் ஊறியும், உபகரணங்கள் நீரினால் நிரம்பிஊறி நிலைமாறிக் காணப்பட நிதானமான பந்துப் பரிமாற்றங்களை நிலத்தினால் மேற்கொள்ள முடியாத நிலை, கோல் காப்பாளர் கோல்பேற்றை முழுதாக பாதுகாக்க முடியாமல் சேறும் சகதியும் ஈரத்தில் பந்து நழுவும் அபாயம், இவ்வாறு பந்தை எடுக்க முயலுபவர் திடீ ரென விழுதல், மழையில் விசி லின் ஓசை வீரர்களைச் சென் றடைய முடியாமை, ஓடிப்போய் விழுபவர் முறைகேடான தவறா அல்லது சறுக்கி விழுந்தாரா என ஊகிக்க முடியாமை அத்தோடு உதவி நடுவர்கள் மழைக்கோட்டும தலைக்கவசமும் அணிந்து கொண்டு தம்மைப் பாதுகாப்பதா நடுநிலை மையைப் பாதுகாப்பதா எனத் தெரி யாத திண்டாட்டம். இந்த நிலை யில் ஒரு பொருத்தமற்ற சூழ லிலேயே போட்டிகள் நடந்ததை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக உண்மையில் ஒரு விளையாட்டு வீரனின் உடல் நிலையும் பாதிப்படையும் சாத்தி யக்கூறு அதிகம் உண்டு. என்பது மருத்துவர் கருத்து. இத்தனைக் கும் மத்தியில் போட்டி ஏற்பாட்டா ளர்களோ, மழையோ, புயலோ போடடியை நடத்தி முடித்து விட வேண்டும் என்பதிலேயே குறி யாகவுள்ளனர். எனவே இந்த நிலைமை விளையாட்டை அவம திக்கும் நடவடிக்கையாகக் காணப பட்டது போல் தெரிகிறது. எனவே இத்தவறு எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படவேண்டுமென்பது எல் லோருடைய அவாவும் அபிப்பிரா யமுமாகும்.




# தவறுக்குரியவர் ஒருவரல்ல

உலக கிரிக்கெட் வரலாற்றில் இது வரை இனம் காணப்பட்ட பந்து வீச்சாளர் யார்? யாராக இருப்பினும் அவர்கள் பந்தை வீசி எறிவதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றனரா?

சேர் றிச்சர்ட் ஹட்லி, டெனிஸ் லிலி, இம்ரான் கான், பிரெட் ட்ருமன், கர்ட்லி அம்புறோஸ், அலென்டொனால்ட், இயன் பொத்தம் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. முன்னர் முரளிதரன், அக்தார், பிரட்லி ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பினும் தற்போது ஷோன்பொலக், மெக்ராத், ஹர்மிசன், ஹர்பஜன்சிங் ஆகியோரும் பந்தை வீசியெறிவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குற்றச்சாட்டுக்கள் அண்மையில் சர்வதேச கிரிக்கெட் சபை நடத்திய பரிசோதனையின் பின்னராகும் முன்னாள் பிரல வீரர்களான மைக்கல் ஹோல்டிங், அரவிந்தடிசில்வா, டிம் மே டேவிட், றிச்சாட்சன் டொனி லூவிஸ் அக்னஸ் பிரேசர் ஆகிய ஆறு பேர்களைக் கொண்ட குழுவே மேற்படி பரிசோதனையை நடத்தியுள்ளது.

முத்தையாமுரளிதரனின் தூஸ்ரா பந்து வீச்சில் ஏற்பட்ட சர்ச்சையே இந்த பரிசோதனைக் குழுவை அமைக்க வேண்டி ஏற்பட்டது. இந்த பரிசோதனையின் போது உலகில் முன்னாள பந்து வீச்சாளர்களும் இந்த மாதிரியான பந்து வீச்சையே கடைப் பிடித்திருப்பதால் அந்த பந்து வீச்சை சட்ட பூர்வமானதாக அனுமதிக்கும் இக்கட் டான நிலைக்கு ஐ.சி.சி உள்ளாகியது. இவ்வா றான அனுமதியினால் ஏனைய வீரர்கள் நன்மை யடைவதுடன் சிறிலங் காவுக்கு அது பெரும் வரப்பிரசாதமாக அமைந்து விட்டது.



இதன் மூலம் 532 விக்கெட்டுகளை வீழ்த் தியுள்ள முரளிதரன் மேலும் விக்கெட் பெறும் வேட்டை யில் ஈடுபடலாம். எனினும் இந்த அனுமதியை நடை முறைப்படுத்தும் உரிமையை 2005 ஆம் ஆண்டு வரை ஐ.சி.சி ஒத்திவைத்துள்ளது. அதனால் முரளிக்கு நியூசிலாந்து தொடரில் தூஸ்ராவைபயன் படுத்த முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

மேற்படி ஐ.சி.சி நடத்திய ஆய்வுகளின் படி முன்னாள் பிரபல பந்து வீச்சாளர்களும் இதனால் பாதிக்கப்படுவ தாக சிலர் தெரிவிக்கின்றனர். விசேடமாக இம்ரான் கான், ஹட்லி ஆகியோர் தமக்கு அவமானத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

ஆய்வுக்குழு உறுப்பினரான அக்னர் பிரேயர்ஸ் தெரிவித் திருப்பதாவது, லிலி, இம்ரான் கான் பொதம் ட்ருமன் ஆகி யோரும் பந்தை வீசியெறி வதாகவே தெரிவித்துள்ளனர்.

எனினும் குழுவில் அங்கம் வகிக்கும் நியூ சிலாந்து முன்னாள் விக்கெட் காப் பாளர் பந்து வீச்சில் மணிக்கட்டு வளையும் அளவு 15 வீதத் துக்கு மேற்பட அனுமதித்துள்ளமையை கண்டித் துள்ளார்.

எவ்வாறாயினும் தூஸ்ரா முறைப்பந்து வீச்சுக்கு அனும தியளித்துள்ளமைசிறிய பிரச்சி னையாயிருந்து அது பூதாகரமாக உருவெடுத்திருந்தமை குறிப் பிடக்கக்கது.



# இதெல்லாம் சகஜமப்பா...!

இந்திய பாகிஸ்தான் அணி களுக்கு இடையே அண்மையில் பவளவிழா ஒரு நாள் போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பந்து வீசி முடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலிக்கு இரண்டு டெஸ்ட் போட்டிகள் தடை விதித்தது சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) இந்தத் தீர்ப்பு இந்திய இரசிகர்களுக்கு கொந்தளிப்பை ஏற்படுத்தா விட்டாலும் கூட கிரிக்கெட் பிரபலங்களிடையே சின்ன அதிருப்தியை ஏற்படுத் தத்தான் செய்தது. ஓவர் வீசி முடிக்க கூடுதல் நேரம் ஆனதற்கு பல காரணங்கள் இருந்தன.



அதையெல்லாம் ஏன் ஐ.சி.சி கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லை என வருத்தப்பட்டனர் ஆனால் ஒரு புள்ளி விபரம் அவர்கள் படித்தா கஊேயானால் தேவையில்லாமல் வருத்தப்பட்டு மனதைக் குழப்பிக் கொள்ள மாட்டார்கள்.

என்ன புள்ளி விபரம்...?

சௌரவ் கங்குலியின் கிரிக் கெட் வாழ்க்கையை சற்றே புரட் டிப் பார்த்தால் அம்பயர்களிடம் தகராறு செய்வதும் அடுத்த சில போட்டிகள் தடை விதிக்கப் படுவதும் அவருக்கு சகஜமாகவே இருந்து வந்துள்ளது.

மார்ச் 27,1998 அவுஸ்திரேலி யாவுக்கு எதிரான பெங்களூர் டெஸ்ட் போட்டி சௌரவுக்கு எல்.பி.டபிள்யூ அவுட் கொடுத் தார் அம்பயர்டேவிட் ஷெப்பேர்ட், கோபப்பட்ட கங்குலி ஷெப்பேர் டிடம் தனது துடுப்பை உயர்த்திக் காட்டி எச்சரித்தபடியே வெளியே றினார். விளைவு...? கொச்சியில் நடந்த ஒரு நாள் போட்டிக்குத் தடை.

* டிசம்பர் 11,2000 கான்பூரில் சிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் போட்டி அம்பயரின் தீர்ப்புக்கு ஆடு களத்திலேயே அதிருப்தி தெரிவித்தார். அடுத்த போட் டிக்குத் தடை

*. யூலை 26,2001 கொழும்பு நகரில் நடந்த கோக்கக்கோலா கோப்பைத் தொடரில் நியூ சிலாந்துக்கு எதிரான போட்டி அம்பயர் அவுட் கொடுத்தும் தலையை அசைத்து இது அவுட்டே இல்லை என்று முணுமுணுத்தப்படியே வெளி யேறினார். இலங்கைக்கு எதிரான அதற்கடுத்த போட்டிக்குத் தடை

* ஆகஸ்ட் 1,2001 கொழும்பு நகரில்கோக்கக்கோலா கோப் பைத்தொடரின் இலங்கைக்கு எதிரான போட்டி இலங்கை வீரர் ரஸ்ஸல் அர்னால்ட் கொடுத்த ஒரு பிடி வாய்ப்புக்கு அவுட் மறுத்தார் அம்பயர் கங்குலி பயங்கர டென்ஷன் அடுத்த பந்திலேயே அர்னால்ட் எல்.பி. டபிள்யூ ஆகிவிட்டார்.

அவ்வளவுதான் சாதித்துவிட்ட உற்சாகத்தில் அர்னால்டை நோக்கி வார்த்தைகளை அள்ளி வீச விதிக்கப்பட்டது அபராதம்

*. நவம்பர் 20,2001 தென் ஆபிரிக்காவுக்கு எதிரான போட் டி எலிசபெத் டெஸ்ட் போட்டி ரெப்ரி மைக் டென்னஸ் புதிய வரலாறு படைத்தார். பந்தை சுரண்டினார் என்று சச்சின் அதிகம் அவுட் அப்பீல் செய்தார் என்று சேவக் இருவருக்கும் ஒரு டெஸ்ட் தடை தனது வீரர்க ளைக் கட்டுப்படுத்திவைக்கவில்லை என்று அணித்தலைவர் சௌரவுக்கு ஒரு டெஸ்ட் இரண்டு ஒரு நாள் போட்டிகள் தடைவிதித்தார்.

*.டிசம்பர் 22,2002 நியூசி லாந்துக்கு எதிரான வெலிங் டன் டெஸ்ட் முதல் இன்னிங் சில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசி முடிக்காத தற்காக சௌரவ் உட்பட ஒட்டு மொத்த அணிக்கும் 35 சதவீத ஆட்ட ஊதியம் அபராதம்.

*. டிசம்பர் 8,2003 அவுஸ்தி ரேலியாவுக்கு எதிரான பிரிஸ் பேன் டெஸ்ட் குறிப்பிட்ட நேரத்தில் பந்து வீசி முடிக்கவில்லை சௌரவுக்கு 10 சதவீதம் எஞ்சிய இந்திய வீரர்களுக்கு 5 சதவீதம், போட்டி ஊதியத்தில் அபராதம்.

* சனவரி 22,2004 அவுஸ் திரேலியாவுக்கு எதிரான சிட்னி ஒரு நாள் போட்டி இங்கும் அதே கதை தான் குறிப்பிட்ட நேரத் திற்குள் பந்து வீச்சை முடிக்கா ததற்கு கங்குலிக்கு 80 சத வீதம், எஞ்சிய இந்திய வீரர்களுக்கு 15 சதவீதம் போட்டி ஊதியமும் அபராதம்

கடைசியாக இப்போது கோல்கட்டா போட்டி

இப்படி சௌரவ் கங்குலி பற்றி நிறைய நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். கிரிக்கெட் என்றில்லை

ஒவ்வொரு விளையாட்டுக்கும் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதை மதித்து நடக்க வேண்டியது வீரர்களின் கடமை இல்லையா..?

# நீதிபதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சிறிலங்காவில் விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் சகல நீதி மன்றங்களினதும் நீதிபதிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விசேட பயிற்சிபெற்ற பொலிஸ் பிரிவு ஒன்றை அமைக்க அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இப் பொலிஸ் படையினர் நீதிமன்ற செயற் பாடுகளிலும் நீதிபதிகளினதும் பாது காப்புக்குப் பொறுப்பாக செயற்படும்.

இது தொடர்பான விசேட பாது காப்புத்திட்ட நடவடிக்கைகளுக் குப் பொறுப்பாக மக்கள் பாது காப்பு சட்ட ஒழுங்கு அமைச்சர் ரத்னசிறிவிக்கிரமநாயக்க செயலர் திலக் ரணவிராஜ, பொலிஸ்மா அதிபர் சந்திராபர்னாந்து ஆகி யோர் கடமையாற்றுவர்.

அண்மையில் உயர்நீதிமன்ற நீதிபதி போதைப்பொருள் கடத் தல் தொடர்பான வழக்கு விசார ணைக்குத் தீர்ப்புக் கூறிய பின்னர் கொலைசெய்யப்பட்டதையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வரவு-செலவுத் திட்டத்தின் நன்மை சமாதானம் ஏற்பட்டாலே கிடைக்கும்

## - ஐ.தே.க.பா.உறுப்பினர்கள் கருத்து

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் மாத்திரமே இந்த வரவு-செலவுத் திட்டம் நன்மைபயக் கக்கூடியதாக இருக்குமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பி னர் பந்துல அபேவர்த்தன தெரி வித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ் வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் வரவுசெலவுத்திட்ட யோசனைகள் நாட்டின் அபிவிருத்திக்குப் போதியதாக இல்லை. உள்ளூர் கைத்தொழில்கள் மேலும் விருத்தி செய்யப்பட்டு உலக சந்தையில் போட்டியான உற்பத்திகளை விடக்கூடியதாக இருக்க வேண் டும் என்றார்.

இதேவேளை ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க கலந்துகொண்டு உரையாற்றுகையில், பொறுப் புள்ளதும் பெருமைவாய்ந்தது மான நாடொன்றைக் கட்டி யெழுப்புவதற்கு இந்த வரவு செலவுத் திட்டம் அடித்தள மிட்டுள்ளதாகவும் கூறினார்.

### பதவியேற்பு

(கொழும்பு)

ஹெல உறுமய கட்சியின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக அளவ்வ நந்தா லோகதேரர் சபாநாயகர் முன்னி லையில் பதவியேற்றுள்ளார்.

முன்னர் இம்மாவட்ட பாராளு மன்ற உறுப்பினராக இருந்த கொலன்னாவ சுமங்கலதேரர் பதவி விலகியதையடுத்தே இவர் பதவியேற்றுள்ளார்.

### கட்சித் தாவல்

(கொழும்பு)

மதவாச்சி தேர்தல் தொகுதி யின் ஐ.தே.கட்சி பிரதான அமைப் பாளராகவிருந்த ஞானசேனகோன பீணுவல தமது பதவியிலிருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் உள்ள ஏனைய கிளை அமைப்புக்களையும் கலைத்துவிட கட்சி உயர்பீடம் தீர்மானித்திருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மாகாணசபைத் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியவற்றில் படுதோல்வியடைந்த கோனபீணு வலதனது பதவி விலகலை சந்திரிகாவிடம் தெரிவித்ததுடன் தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யுடன் இணைவதை உறுதிப்படுத் திக்கொண்டுள்ளார்.

### சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

குடும்ப வன்முறைச் செயல் களைத் தடுப்பது தொடர்பான சட்டமூலப் பிரேரணையை ஆளும் கட்சிப் பிரதம கொறடாவான அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண் டோபுள்ளே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பாராளுமன்றம், சபாநாயகர் தலைமையில் கூடியது. இச்சமயம் வாய்மூல விடைக்கான வினாக் கள் முடிவுற்றதும் சபாநாயகரின் அனுமதியைப் பெற்று அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே இச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். எவையேனும் குடும்பவன்முறைச் செயல்களைத் தடுப்பதற்கும் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடை நேர் விளைவான கருமங்க ளுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்ட மூலமாகவே இப் பிரேரணை உள்ளது.

# வெலிக்கடை சிறைச்சாலையில் செல்போன்கள், கத்திகள் மீட்பு

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை இரவு வெலிக்கடைச்சிறைச்சாலையில் நான்கு கையடக்கத் தொலைபேசிகள், இருபது கத்திகள் என்பன கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி றமிமாசுக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைச்சாலையினுள் ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டுள்ளதாகத் தமக்குக்கிடைத்த தகவலை யடுத்து மேற்கொண்ட தேடுதலின்போதே மேற்படி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத்தெரிவித்தார்.

# ஆயுதத் தொழிற்சாலை செவனகலயில் முற்றுகை!

(கொழும்பு)

பொலநறுவை செவனகலப் பிரதேசத்தில் ஆயுதம் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றினை சிறி லங்கா பொலிசார் முற்றுகையிட் டுள்ளனர். அங்கு துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இரு வரை கைது செய்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் தயாரிக்கப் பட்டுள்ள ஆயுதங்கள் தென்பகு தியில் விற்கப்பட்டு வந்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

தென்னிலங்கையில் குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட வர்கள் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக அறியவரு கின்றது.


## வடபிராந்திய போக்குவரத்துச்சபை-கோண்டாவில்
## வழங்குநர்களையும் சேவைகளையும்
## பதிவு செய்தல் - 2005

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளை யும் வழங்குவதற்கு வ.பி.போ. சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்கு நரிடமிருந்து விண்ணப்பங்கள் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

*வழங்கல்கள்:-*

1. பேருந்துகளுக்கான உதிரிப்பாகங்கள் வழங்கப்பட வேண்டிய பேருந்துகளின் இனம் பின்வருமாறு:
   அ.லேலண்ட், லங்கா அசோக் லேலண்ட்
   ஆ. டாட்டா-1210எஸ்ஈ.1313(டிமோ)
   இ. கிறேட் வோல் (சீனத்தயாரிப்பு)
2. வில்லுத்தகடுகள்
3. ரயர், ரியூப் வகைகள்
4. பற்றரி அசிட் வகைகள்
5. மின் உபகரணங்கள், மின் சாதனங்கள்
6. பிளாஸ்ரிக் கண்ணாடி, பாதுகாப்புக் கண்ணாடி வகைகள்.
7. சகலவகையான இரும்புப் பொருட்கள், ஆணி வகைகள் சோல்டறிங் ஈயம், இனாமல் பெயிண்ட் வகைகள், அலுமினியம் சீட் , கல்வனையிஸ்ட் சீற்
8. அலுவலக மரத்தளபாடங்கள்.
9. அலுவலக உபகரணங்கள், ஸ்டீல் அலுமாரி, ஸ்ரீல் கபினெற்கள.
10. காகிதாதிகள்.
11. கணினி இயந்திரங்களுக்கான உபகரணங்கள்.

*சேவைகள்:-*

1. அச்சிடும்-ரிக்கட் புத்தகங்கள் பொதிச்சீட்டுக்கள், வழிப்பட்டியல் கள் ஆகிய பலதரப்பட்டவைகள்.
2. அலுவலகத் தட்டச்சுத் திருத்துதல், பக்ஸ் இயந்திரம் திருத்துதல், போட்டோபிரதி செய்யும் இயந்திரம் திருத்துதல்.
3. கடைச்சல் வேலை செய்தல்.
4. டீசல் இன்யெக்ரர் பம்புகள் திருத்துதல். மற்றும் இவற்றிற்கான இன்ஜெக்ரர்கள், நொசில், பம் இன்ஜெக்டர் எலிமென்ற், வால்பு ஆகிய உபகரணங்கள்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல் கள்/சேவைகள்-2005 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால்மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. வழங்கல்களுக்கும சேவைகளுக்குமான விண்ணப்பங்கள். தலைவர், கூறுவிலைச்சபை, வ.பி.போ.சபை, பலாலிவீதி கோண்டாவில்' எனமுகவரி இடப்படல் வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 100 காசாக/காசுக்கட்டளையாக/ தபாற்கட்டளையாக பிராந்தியக் கணக்காளரின் பெயரில் பெறப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கோரப்படும்போது விலை மனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன் அறிவித்தலின்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல்/சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபாரப்பதிவின் இலக்கமும், திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. எமக்குக்கிடைக்கக்கூடிய கடன்வசதிகள்/கால எல்லை

*குறிப்பு:-* சேவைகள் வழங்கலுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக்காரியாலயத்தில் விநியோக அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

க.கணேசபிள்ளை,
பொதுமுகாமையாளர்,
வ.பி.போ.சபை, கோண்டாவில்.

(சி-10632)



## 5 ஆம் ஆண்டு நீங்காதநினைவு

தாயின் மடியில் முத்தாய்
1972 01 08



தாயக மண்ணில் வீத்தாய்
1999 11 23

## மேஜர் செங்கோட்டையன்
### வேலாயுதம் கதிர்காமநாதன் [நாதன்]

மன்னார் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர்
என் அருமை மகன் நா ன்
திருமலை விளாங்குள ,தைப் பிறப்பிடமாகவும்
பளை இத்தாவிலை வ சிப்பிடமாகவும்,
பளை மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர
விஞ்ஞானதர மாணவனாகக் கல்வி கற்று
பாட்டுக்கார கதிர் என்றும்
திறமை வாய்ந்த மாணவன் என்றும் பெயர்பெற்று
தன் மூத்த சகோதரர்கள் சென்ற வழியில்
தன்னையும் தேசியத் தலைவரின்
தத்தெடுத்த குழந்தையாக செங்கோட்டையன்
என்ற பெயருடன்
மன்னார் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளராக
கல்விக்காக அரும்பாடுபட்டு சேவை செய்து
மக்கள் மனதில் ஆணி வேராய் இடம் பிடித்தான்
செங்கோட்டையன்.
மகனே நாதா நீ உன் குடும்பத்திற்காக
செய்த நன்மைகள் பலகோடி
நீ எம்மைவிட்டுப்பிரிந்து 5 ஆண்டுகளாகிவிட்டதையா
உன்நினைவு எம்மை தினந்தோறும்
வாட்டிய வண்ணமே உள்ளது.

உன் பிரிவால் வாடும் உன்
குடும்பத்தினர்.

தகவல்:- K. ரஞ்சிதராசா,
திலகண்ணாச்சி குடியிருப்பு,
கைவேலி,
புதுக்குடியிருப்பு.

(சி-4936)

# ஜெயேந்திரர் கைது குறித்து சோனியா மீது குற்றம் சாட்டுவது தவறு

## - தி.மு.க தலைவர் கருணாநிதி

(சென்னை)

கைது செய்யப்பட்டதற்கு சோனியா காந்தியே காரணம் என்று வீண் பழி சுமத்தி மதப்பிரச்சினையை உண்டாக்க அசோக் சிங்கால் முயற்சிப்பதாக கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி ஜெயேந்திரர் ஒரு கொலை வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டதற்கு திருமதி சோனியா காந்திக்கு தொடர்பு உண்டு என்று விசுவ இந்து பரிசத்தின் தலைவர் அசோக் சிங்கால் சண்டிகார் நிருபர் கூட்டத்தில் கூறியிருப்பது அடிப்படையில்லாததும் அவதூறு நிறைந்ததுமான பச்சைப் பொய்யாகும். கூறுவது பொய்யென்று தெரிந்தே திட்டமிட்டு அவர் கூறியுள்ளது விஷமத்தனமானது.

தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் கைது செய்ததற்கான காரணங்களையும் தழிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கையாகவே வாசித்து அந்த விபரங்கள் நாடு முழுவதும் வெளிவந்திருக்கும்போது அசோக் சிங்காலுக்கு மட்டும் தமிழக முதலமைச்சர் யார் என்று இன்னமும் தெரியாமல் சோனியா காந்தி மீது வீண்பழி கூறுவதும், சோனியா கிறிஸ்துவர் என்றும், கைதுச் சம்பவம் நடைபெற்ற ஆந்திர மாநில முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி கிறிஸ்துவர் என்றும் சுட்டிக்காட்டி குற்றம் சாட்டுவதும், தேவையற்ற மதமாச்சர்யத்தைத் தூண்டி விடும் சூழ்ச்சியாகும். எனவே அசோக் சிங்கால் போன்றோர் நடத்தும் இந்த திசை திருப்பும் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று கூறப்பட்டுள்ளது.


## 50ஆம் அகவையில் வாழ்த்துகின்றோம்



தமிழினம் தலைதூக்கி வாழவே
தாரணி போற்றிடும் உத்தமனாய்
எடுத்திட்டகுறிக்கோள் தனையே
ஏற்றமுடன் சளைத்திடாது
வெற்றிதனைத் திக்கெட்டும் பரப்பிடவே
வேங்கைக் கூட்டமதற் குரமூட்டி
அஞ்சா நெஞ்சதிலே
ஆளுமையாய்த் திட்டங்களை
வளமாகத்தீட்டிடும் ஒளிச்சுடரே
நீ வாழ்க பல்லாண்டு மேதினி போற்றிடவே

மு/புதுக்குடியிருப்பு ம. வி.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
ஊழியர்கள்

(சி-10519)



## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் 26 • 02 • 1978



தாய் மண்ணில் 23 • 11 • 1995

## லெப்ரினன்ட்-கருங்குழலி

(பொபினீசியா அல்போன்ஸ் லிகோறி)

ஈழத்தாயின் மண் மீட்க உன்
தாய் உன்னை ஈன்றெடுத்தாள்
வீர மறக்குலப் பெண்ணென-நீ
வீறு கொண்டாய், வீழ்ந்து பட்டாய்-இது
வீழ்ச்சியல்ல, உன் தாய் மண்ணின் மீட்சி- என
வெந்தளிர் நினைவோடு ஆண்டுகள் ஒன்பதிலும்
உறைந்து நிற்கிறது உன் நினைவு

ஐயா, அம்மா, அண்ணன்மார்,
அக்கா, தம்பி, தங்கை,
மருமக்கள்.

மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(சி-10518)



# கேள்வி அறிவித்தல்

## பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை-வவுனியா
## 2005 ஆம் வருடத்திற்குத் தேவையான வழங்கல்கள்/சேவைகள்

1. வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்குற்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
   அ. சமைக்காத/சமைத்த உணவு வழங்கல்கள்
   ஆ. அழுக்குத்துணிகள் சலவைசெய்தல்
   இ. காவல்சேவை
   ஈ.துப்பரவு ஏற்பாட்டுச் சேவை
2. 2005 சனவரி 1முதல் டிசம்பர் 31 வரையான காலப் பகுதிக்கான இவ் வழங்கல் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 7.12.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00மணிவரையும் வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல்/சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.
3. அரசாங்க ஒப்பந்தத்தைச் செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
4. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையைச் செலுத்துவதுடன், உணவு வழங்கல், சலவைசெய்தல் என்பவற்றிற்கான பெறுமதி ஆவணத்தினையும் வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 8.12.2004 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
5. வைப்புத் தொகைகளும், ஆவணங்களும் .

அ. சமைக்காத/சமைத்த உணவு வழங்கல்கள்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| பொதுவைத்தியசாலை 01 | 1000.00 | 50,000.00 | 250,000.00 |
| மாவட்ட வைத்தியசாலை 01 | 500.00 | 40,000.00 | 150,000.00 |
| சுற்றியல்கூறு 01 | 250.00 | 25,000.00 | 100,000.00 |
| கிராமிய வைத்திய சாலை 01 | 250.00 | 25,000.00 | 100,000.00 |
| மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும் 04 | தலா 250.00 | தலா 10,000.00 | தலா 50,000.00 |
| மாவட்ட ஆயுர்வேதவைத்திய சாலை 01 | 500.00 | 40,000.00 | 150,000.00 |

ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்

| வைத்தியசாலை | | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| பொதுவைத்தியசாலை 01 | தொகுதி 1 | 500.00 | 15,000.00 | 75,000.00 |
| | தொகுதி 2 | 300.00 | 15,000.00 | 50,000.00 |
| மாவட்ட வைத்தியசாலை 01 | | 250.00 | 10,000.00 | 30,000.00 |
| சுற்றியல்கூறு 01 | | 250.00 | 5,000.00 | 15,000.00 |
| கிராமிய வைத்தியசாலை 01 | | 100.00 | 5.000.00 | 15,000.00 |
| மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும் 04 | | தலா 100.00 | தலா 25,000.00 | தலா 10,000.00 |
| மாவட்டஆயுர் வேதவைத்திய சாலை 01 | | 250.00 | 10,000.00 | 30,000.00 |

இ. காவல் சேவை வழங்கல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| பொது வைத்தியசாலை 01 | 1000.00 | 50,000.00 |

ஈ) துப்பரவு ஏற்பாட்டுச் சேவை

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| பொது வைத்தியசாலை 01 | 1000.00 | 50.000.00 |

உ. ஆவணங்கள்

01) 01-11-2004 ஆம் திகதிக்குப் பின் அந்தந்த பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதம் (பி.செ.எம்.201/பொது 170 படிவம்) மேலே கூறப்பட்ட ('அ'விற்கும்) மாத்திரம்.
02) காவல் சேவை வழங்குவதற்காக கேள்விப் பத்திரம் கோரும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
03) பதிவு செய்யப்பட்ட துப்பரவு ஏற்பாட்டுச் சேவை வழங்குவதற்காக கேள்விப் பத்திரம் கோருபவை நிறுவனங்கள் / சங்கங்களாக இருத்தல் வேண்டும்.
04) முன்னைய அனுபவங்கள் தொடர்பான சான்றிதழ்கள். மேலே கூறப்பட்ட ('இ'விற்கும் 'ஈ' விற்கும்) மாத்திரம்.
05) கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமூகமளிக்கலாம்.
06) கேள்வி தொடர்பாக கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
07) மேலதிக விபரங்கள் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக் கணக்காளர் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்,
மா.சு.சே. பணிப்பாளர்,
மா.சு.சே.பி.ப. பணிமனை, வவுனியா.

(சி-10634)

# கான்பூர் ஆடுகளம் சுழற்பந்துக்கு சாதகமானது அல்ல—முரளிகார்த்திக்



இந்தியா-தென்னாபிரிக்க அணிகளிடையே கான்பூரில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் பந்து வீச்சு எடுபடவில்லை.

2 நாள் ஆட்டத்தின் முடிவில் தென்னாபிரிக்கா 459 ஓட்டங்களைக் குவித்தது. இந்திய பந்து வீச்சாளர்கள் முதல் நாள் ஆட்டத்தில் 4 விக்கெட்டுக்களும், நேற்றைய 2 ஆவது நாள் ஆட்டத்தின் 3 விக்கெட்டுக்களும் எடுத்தனர். பந்து வீச்சாளர்களின் பரிதாப நிலையை இது காட்டியது. இதில் கும்ளேக்கு 5 விக்கெட்டுகளும், ஹர்பஜன்சிங், கங்குலி ஆகியோருக்கு தலா ஒரு விக்கெட்டும் கிடைத்தன.

இந்நிலையில் கான்பூர் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இல்லை என்று முரளி கார்த்திக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-


ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகம் அளிக்கும் வகையில் இருந்தது. பந்து வீச்சாளர்களால் விக்கெட்டைக் கைப்பற்றுவது எளிதாக இல்லை. பந்து 'பவுன்ஸ்' ஆகவில்லை. அதோடு பந்து வீச்சுத் தன்மையும் மாறவில்லை. முதல் இரண்டு நாளும் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இல்லை.

5 விக்கெட்டைக் கைப்பற்றிய கும்ளே இந்த விக்கெட்டுகளை எளிதாக கைப்பற்றி விடவில்லை. கடின போராட்டத்திற்கு பிறகே அவரால் கைப்பற்ற முடிந்தது. இவ்வாறு முரளி கார்த்திக் கூறினார்.

# முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை

கான்பூர் டெஸ்டில் எங்கள் அணி தற்போது வலுவான நிலையை எட்டியுள்ளது. இந்த நேரத்தில் ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னரே எங்கள் அணியில் அனுபவமில்லாத வீரர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளதைப் பலரும் பெரும் குறையாகவே கூறிவந்தனர். உண்மையில் அணியில் அனுபவமற்ற இளம் வீரர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் திறமையானவர்கள். முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பது தானே பழமொழி. இந்த நோக்கத்தில் தான் நாங்களும் களமிறங்கினோம். அதற்கான பலனும் கிடைத்து வருகிறது. என தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஷோன்போலக் தெரிவித்தார்.

என்னைப் பொறுத்தவரையில் ஒரு மைல் கல்லைக் கடப்பதற்காக காத்திருக்கிறேன். டெஸ்ட் போட்டிகளில் 300 இற்கும் அதிகமான விக்கெட் வீழ்த்தியுள்ள நான் தற்போது 3 ஆயிரம் ஓட்டங்களை நெருங்கியுள்ளேன். இந்த இலக்கை எட்டினால், 300 விக்கெட் மற்றும் 3 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இயன் போத்தம்(இங்கிலாந்து),கபில்தேவ் (இந்தியா), ரிச்சாட் ஹாட்லி (நியூசிலாந்து) மற்றும் இம்ரான் கான் (பாகிஸ்தான்) ஆகிய சிறந்த பந்து வீச்சாளர்கள் வரிசையில் எனது பெயரும் சேர்க்கப்படும். எப்போதுமே சொந்த சாதனைக்காக மட்டுமே நான் விளையாடுவதில்லை. அணியின் வெற்றியே முக்கியம். அதற்காக அதிக விக்கெட் வீழ்த்தவும், ஓட்டங்களை குவிக்கவும் முயற்சிப்பேன். தற்போது 86ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் நான் இன்னும் அதிக போட்டியில் விளையாடி அணியின் வெற்றிக்கு ஒத்துழைக்க விரும்புகிறேன். அதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் என நம்புகிறேன் என்றார்.



ஷான் போலக்

## இங்கிலாந்துக்கு 67 ஓட்ட வெற்றி

67 ஓட்டங்களால் நபிபியாவை இங்கிலாந்து அணி வெற்றி கொண்டாலும் நபிபியாவின் அழுத்தத்திற்கு முகம் கொடுக்கவேண்டியே இருந்தது. நபிபியாவில் நடைபெறும் ஒரு நாள் கிரிகெட் போட்டி ஒன்றில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மைக்கல் வோகன், அன்ருஸ்ரோஸ் ஆகியோரின் துடுப்பாட்டத்தில் தலைதப்பியது. வோகன் 89,ஸ்ரோஸ் 73 ஆயினும் அவ்வணியின் இயன்பெல் (1) கெவின் பீற்றசன் (5) சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தனர். பதிலுக்கு ஆடிய நபிபியா குறிப்பிட்ட ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

## பொண்டிங் பாராட்டு

நியூசிலாந்துடனான தனது முதலாவது போட்டியில் இன்னிங்ஸ் 156 ஓட்டங்களால் வெற்றியீட்டியதால் அவுஸ்திரேலிய அணித் தலைவர் றிக்கி பொண்டிங் தனது வீரர்களைப் பாராட்டியுள்ளார்.

போட்டியின் முதல் இரு நாட்களிலும் தனது அணி வீரர்கள் மந்தகதியில் செயற்பட்டாலும் இறுதி இரண்டு நாட்கள் தமது திறமையைக் காட்டியுள்ளதாகவும் குறிப்பாக பின் வரிசை வீரர்கள் சிறப் பாக ஆடினர் எனத் தெரிவித்துள்ளார். நியூசிலாந்து வீரர்களும் முதல் இரண்டு நாட்களிலும் சிறப்பாக ஆடியதை தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார்.


# கான்பூர் டெஸ்ட் இந்திய பதிலடி விக்கெட் இழப்பின்றி 185 ஓட்டம்





இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கான்பூரில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று தனது முதலாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் இந்தியா விக்கெட் இழப்பின்றி 185 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஷேவாக், ஹம்பீர் ஆகியோர் தலா 85 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது உள்ளனர்.

முன்னதாக 7 விக்கெட்டுக்களை இழந்து 459 ஓட்டங்களுடன் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்கா 9 விக்கெட்டுக்களை இழந்து 510 ஓட்டங்களைப் பெற்று தனது முதலாவது இன்னிங்சை நிறைவு செய்தது.



துடுப்பாட்டத்தில் அன்ரு கோல் 163, புருயின் 83, டிப்பன்னர் 48, பீட்டர்சன் 34 ஓட்டங்களை முறையே பெற்றனர்.பந்து வீச்சில் கும்ளே 6 விக் கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங் 2 விக்கெட்டுக்களையும், கங்குலி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நடைபெறும்.

## ஒடும்பேயை நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

கென்ய அணியின் முன்னாள் அணித்தலைவர் மவ்ரஸ் ஒடும்பே சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டதைத் தொடர்ந்து இவர் மீது ஐ.சி.சி.யின் (சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்) ஊழல் தடுப்புக் குழு விசாரணை நடத்தியது. விசாரணை முடிவில் ஒடும்பேக்கு 5 ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

சூதாட்டம் தொடர்பாக கென்ய அணியில் உள்ள 14 வீரர்களுக்கு ஐ.சி.சி.ஊழல் தடுப்புக் குழு முன்பு ஆஜராகுமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. வருகிற 30 ஆம் திகதி முதல் டிசம்பர் 2 ஆம் திகதிக்குள் ஆஜராகுமாறு கூறப்பட்டுள்ளது. ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மார்ட்டின் ஹொக்கின்ஸ், ஆலன்பீக்காக் ஆகியோர் கென்ய வீரர்களிடம் விசாரணை நடத்துவார்கள்.

## அவுஸ்திரேலியாவுக்கு அடுத்து தலைசிறந்த அணி இங்கிலாந்தே

### இயான் பொத்தம்

இந்தியத் துடுப்பட்ட வீரர்கள் மோசமாக விளையாடி வருவதற்குக் காரணம் இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள மட்டமான ஆடுகளங்களே (பிட்ச்) என இங்கிலாந்தின் முன்னாள் சகலதுறை வீரர் இயன் பொத்தம் கூறியுள்ளார்.

மிகச் சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டது இந்தியா. ஆனால் மோசமான ஆடுகளங்களால் அந்த அணியினர் துடுப்பட்டத்தில் தோல்வியுற்று, வெறுப்படைய வேண்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சமீபத்திய தொடரிலும் இதே நிலைதான் காணப்பட்டது.

அவுஸ்திரேலியாவுக்கு அடுத்து உலகில் தலைசிறந்த அணியாக இந்தியாவை நான் கருதவில்லை. எழுச்சியான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இங்கிலாந்து அணியே தற்போது அச் சிறப்புடன் உள்ளது என்றார் பொத்தம்.

லெஜன்ட்ஸ் கோப்பை கோல்ஃப் போட்டியில் பங்கேற்க இந்தியா வந்துள்ள அவர் ஞாயிற்றுக் கிழமை நிருபர்களிடம் இக்கருத்தைத் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலிய டெஸ்ட் சபீர் அகமது ஆடமாட்டார்

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் இடையேயான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் நடக்கிறது. இதில் பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒரு வரான சபீர் அகமது காயம் காரணமாக ஆட மாட்டார் என்று அணியின் தலைவர் இன் சமாம் தெரிவித்து ள்ளார்.

## உலகக் கிண்ண கபடிப் போட்டி இந்திய அணி கைப்பற்றியது

கபடிக்கான முதல் உலகக் கோப்பையை இந்தியா கைப்பற்றியுள்ளது. மும்பையில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஒரு தரப்பான இறுதி ஆட்டத்தில், ஈரான் அணியை 55-27 என்ற கணக்கில் தோற்கடித்தது இந்திய ஆடவர் அணி.

16 முறை பாடிச் சென்று 17 புள்ளிகளைக் குவித்து இந்திய அணியின் வெற்றியில் முக்கியப் பங்காற்றினார் சஞ்சீவ் குமார்.அவரே போட்டி நாயகனாவும் தேர்வு பெற்றார்.இந்திய அணிக்கு ரூ. 2 இலட்சமும், ஈரான் அணிக்கு ரூ. 1.25 இலட்சமும் பரிசு வழங்கப்பட்டது.காலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் வங்கதேசத்தை 39-19 என இந்தியாவும், கனடாவை 54-28 என ஈரானும் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறின.



அமெரிக்காவில் நடைபெற்று வந்த உலகின் முன்னணி வீரர்கள் பங்கேற்ற மாஸ்டர் கிண்ண டென்னிஸ் இறுதிப் போட்டியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெரடர் சம்பியனானார்.

அவர் தன்னை எதிர்த்தாடிய அவுஸ்திரேலியாவின் லெவிட்டன் ஹெவிட்டை 6-3, 6-2 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார்.

## அவுஸ்.முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹூக்ஸ்

## கொலையாளிக்கு நீதிமன்றில் ஆஜராக உத்தரவு



அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டேவிட் ஹூக்ஸ் கொலைச் சம்பவம் தொடர்பாக உல்லாச விடுதிக் காவலாளி (22) ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஹூக்ஸ் விக்டோரிய மாநிலத்தின் கிரிக்கெட் பயிற்றுனராக கடமையாற்றுபவராவார். அவர் கடந்த சனவரிமாதம் மேற்படி உல்லாச விடுதியில் மோதல் ஒன்றின் போது கொல்லப்பட்டார்.

டரன்லீமன் உட்பட பல பேரிடம் விசாரணை நடத்திய பின்னர் வரும் மார்ச் மாதம் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஹூக்ஸ் 1977 முதல் 86 வரை சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளதுடன் 1306 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரின் சராசரி 34, 36 ஆகும்

## 1500 மீற்றர் பிரீஸ்டைல் நீச்சலில் பிரான்ஸ் வீராங்கனை உலக சாதனை

பிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச நீச்சல் போட்டியில் 1,500 மீற்றர் பிரீஸ்டைல் போட்டியில் புதிய உலக சாதனை படைத்துள்ளார் பிரான்ஸை சேர்ந்த லாரே மனவ்டோ. 17 வயதாகும் இவர் 1,500 மீற்றர் தூரத்தை 15 நிமிடம் 42.39 வினாடிகளில் கடந்தார்.

இதனால் 22 ஆண்டுகளுக்கு முன்பு புளோரிடாவில் நடைபெற்ற போட்டியில் கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த பெட்ரா ஷினிடர் நிகழ்த்தியிருந்த சாதனை (15:43.31வி) முறியடிக்கப் பட்டுள்ளது.

புதிய சாதனை படைத்த மனவ்டோ எதென்ஸ் ஒலிம்பிக் சம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

400 மீற்றர் போட்டியில் தங்கம் வென்று 50 ஆண்டுகளுக்கும் மேலாக தனது நாடு பெறாத சாதனையை அப்போது நிகழ்த்தினார் மனவ்டோ.வெள்ளி வெண்கலப் பதக்கங்களையும் ஒலிம்பிக்கில் அவர் கைப்பற்றினார்.

## மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்து அரையிறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்து, மென்பந்து போட்டிகளில் நேற்று நடைபெற்ற கால்பந்து காலிறுதிப் போட்டி ஒன்றில் திருநகர் அணி உருத்திரபுரம் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தெரிவானது.

அரையிறுதிப் போட்டியில் சந்திரோதயா அணியை திருநகர் அணியும், உழவர் ஒன்றிய அணியை லக்கிஸ்ரார் அணியும் எதிர்த்தாடவுள்ளன.

மேற்படி போட்டிகள் நேற்று நடைபெற இருந்தபோதும் பலத்த மழை காரணமாக கைவிடப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.





## சிந்தனைக்கு

சீற்றங்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும் சர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அரசின் நோக்கம் தான் என்ன

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்துவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள போராளிகளைப் படுகொலை செய்தல், அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்தல், துன்புறுத்தல் என்பனவற்றின் மூலம் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்போ அன்றி அரச தரப்போ எதனைச் செய்ய விளைகின்றன? அதாவது எதனைச் சாதிக்க முற்படுகின்றன?

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகள், அன்றி அவர்களின் ஆதரவுகள் மற்றும் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தரப்போ அன்றி அதனுடன் இணைந்து செயற்படும் இனவிரோத சக்திகளோ யார் தாக்குதல் நடத்தினும் அதனை சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பின் ஒத்துழைப்பின்றி நடத்துதல் சாத்தியமானதல்ல. இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு ஆயுதப் படைத்தரப்பே திட்டமும் ஆலோசனையும் ஒத்துழைப்பும் வழங்குகின்றன. அவ்வாறு இல்லாத பட்சத்தில் கூட தாக்குதல் நடத்திவிட்டு தப்பி ஓடி வருபவர்களுக்குப் பாதுகாப்பும் ஒத்துழைப்பும் வழங்குகின்றன.

இவர்களைத் தவிர இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ் மக்கள் மீதும் புலிகள் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு வேறு எவரும் காரணமாக இருக்க முடியாது. இத் தாக்குதல்களுக்கு ஆதாரம் இல்லை தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டுபிடிக்க முடிவில்லை என்பன எல்லாம் நொண்டிச்சாட்டுக்களே

ஆனால் தற்பொழுதுள்ள கேள்வியானது இத்தகைய தாக்குதல்களினால் இவர்கள் சாதிக்க முனைவதென்ன? விடுதலைப்புலிகளை இதன் மூலம் இராணுவ ரீதியில் பலவீனமடையச் செய்து விடலாம் எனக் கருதுகின்றார்களா?அன்றி தமிழ் மக்களை இதன் மூலம் பணிய வைத்து விடலாம் எனக் கருதுகின்றார்களா? இவை யாவும் சாத்தியமற்றவை என இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

சிறிலங்கா அரசாங்கமும் ஆயுதப்படைத்தரப்பும் விடுதலைப்புலிகளை பலவீனமடையச் செய்யவும் தமிழ் மக்களுக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கெனவும், தமிழ் மக்களை அச்சமூட்டிப் பணிய வைப்பதற்கெனவும் பெரும் முயற்சிகளை நீண்ட காலமாகவே மேற்கொண்டு வந்துள்ளன.

விடுதலைப்புலிகளைப் பலவீனமடையச் செய்தல் என்ற ரீதியில் அவர்களுக்கு எதிராகத் தன்னால் இயன்ற வரையிலான இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டதுண்டு ஆனால் அதில் வெற்றிபெற முடியவில்லை. மாறாக இராணுவ ரீதியில் பாரிய பின்னடைவையே சந்தித்தது.

அடுத்ததாக தமிழ் மக்களை மிரட்டி அச்சுறுத்திப் பணிய வைக்கும் செயலில் ஆரம்பம் முதலே சிறிலங்கா அரசும் ஆயுதப்படைத்தரப்பும் தீவிர நடவடிக்கைகளில் இறங்கியிருந்தன. சுமார் 65,000 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ள முடியும். அதாவது மக்களின் ஆதரவே தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் தளம், போராடும் புலிகளின்புலம் என்பனவற்றைப் புரிந்து கொண்டே சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மிலேச்சத்தமான ஒடுக்கு முறையை கட்டவிழ்த்து விட்டது.

ஆனால் சிறிலங்காவும் அதன் ஆயுதப் படையினரும் இவ் விடயத்தில் குறித்த இலக்கை அடையவில்லை. சுருக்கமாகச் சொன்னால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலமிழக்கச் செய்யவோ, அன்றி தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தில் கொண்டுள்ள உறுதியையோ தளர்வடையச் செய்யவில்லை. மாறாக ஒடுக்குமுறை அதிகரிக்கப்பட அதிகரிக்கப்பட மக்களின் உறுதியும் வைராக்கியமும் அதிகரித்த போக்கையே காட்டியது.

இந்நிலையில் தற்பொழுதும் –அதாவது யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்கையிலும் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு இவ்வாறு நடந்து கொள்வதானது அரசாங்கம் யுத்தத்திலேயே நம்பிக்கை கொண்டுள்ளதையே வெளிப்படுத்துவதாக உள்ளது. அண்மையில் தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் சனாதிபதி சந்திரிகா "விடுதலைப்புலிகள் தற்பொழுது பலம் பெற்றுள்ளனர் என்பதை ஏற்க முடியாது" எனக் கூறியது கூட அரசாங்கம் இன்னமும் இராணுவ ரீதியிலான சிந்தனைப் போக்கையே கொணடுள்ளது. என்பதேயே வெளிப்படுத்துகின்றது.

இந்நிலையில்தான் ஆயுதப் படைத்தரப்பும் தொடர்ந்தும் புலிகளைச் சீண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் தற்பொழுது அமுலில் இருக்கும் யுத்த நிறுத்தம்,– மக்கள் அதிக எதிர்பார்க்கையுடன் இருக்கும், சமாதானப் பேச்சுவார்த்தை, என்பனவற்றை முடிவிற்கு கொண்டு வருவதே நோக்கமாகும். அவ்வாறு இல்லாது விடில் தோற்றுப் போன தந்திரோபாயத்திற்கும், புத்துயிர் ஊட்டும் செயலில் சிறிலங்கா அரசும், அதன் ஆயுதப் படைத்தரப்பும் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க மாட்டாது.

### தமிழீழ மாவீரர் நாள் - 2004,

# போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கியமான தாகும். மாவீரா நாள் என்பது, தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்விற்காகவும் உழைத்து உயிரை தற்கொடையாக ஈந்து இந்த மண்ணுக்கே உரமாகி விட்டவர் களினதும் எமது மூச்சுடன் கலந்துவிட்டவர்களினது மாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாத வையாகும். புனிதத்தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றபட வேண்டியவையாகும். இம்மாவீரர் களின் நினைவுகள் என்றும் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக இருக்கும். மாவீரர்களது இத்த கைய நினைவு கூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்துவிடாது, எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரிய வையாகவும் வளர்ந்து வரவேண் டும் இந்த எமக்குரிய உயரிய நிகழ் வை தத்துவார்த்தமாகவும் உணர்பூர்வமாகவும் நிலைநாட்டு வதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினதும் மனமுவந்த ஒருங் கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

தமிழீழ மாவீரர் பணிமனை.

# எம்முடன் செய்துள்ள ஒப்பந்தம் கிழித்தெறியப்படின் அதன் விளைவு அவர்களுக்கே தெரியும்

### -திருமலைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(திருகோணமலை)

"தமிழ் தலைமைகளுடன் கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிளித்தெறியப்பட்டன. விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இன்னும் கிழித்தெறியப்படவில்லை. காரணம் கடந்த கால ஒப்பந்தங்கள் பேனையும் கடதாசியும் கொண்டு எழுதப்பட்ட வையாகும். நாம் செய்து கொண்ட ஒப்பந்தம் பீரங்கிகளும் கனரக ஆயுதங்ளையும் பாவித்தே எம்முடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் கிழித்தெறியப்படுமா னால் அதனால் ஏற்படும் விளைவு கள் அவர்களுக்கே தெரியும். இவ்வாறு விடுதலைப்புலிகள் திரு கோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

நேற்றுப் பகல் திருகோண மலை இந்து கலாசார மண்டபத் தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் எழிலன் சிறப்புரை நிகழ்த்தினார். ஆரம்பத் தில் தமிழீழ தேசியக்கொடியை திருமலை வடக்குக் கோட்ட தளபதி குணம் ஏற்றிவைத்தார். பொது ஈகச்சுடரை திருமலை மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் மதிவாணன் ஏற்றிவைத்தார். திரு மலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி. காருணியா தலைமையுரை நிகழ்த் தினார். அவர் தொடர்ந்தும் உரை யாற்றுகையில் தமிழ் மக்களுக்கு அவர்களின் உரிமையை வழங்கக் கூடாது என்ற முனைப்புடன்தான் பேரினவாத அரசாங்கம் செயற் பட்டுக் கொண்டிருக்கிறது. 6 சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன. பாதிக் கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க் கை பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். அவர்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த வேண் டும் என்று எழுத்தில் தரப்பட்டன. எழுத்தில் தரப்பட்ட அவ்விடயங்கள் இன்னும் கிழித்தெறியப்பட வில்லை. பேனையும் கடதாசியும் கொண்டு எழுதப்பட்ட விடயங்கள் அல்ல. அவை பீரங்கிகள் மற்றும் ஆயுதங்களின் பலத்துடன் அவை எழுதப்பட்டன. அவை கிழித்தெறி யப்படுமானால் ஏற்படப்போகும் விளைவுகள் அவர்களுக்குத் தெரிந் ததே.

" தொடர்ந்தும் சமாதானம் என்று கூறிக்கொண்டு இழுபறி நிலையை தொடர விடமுடியாது. எமக்கு வேண்டும் எமது சுதந்திரம். தீர்வு ஒன்றைத் தரத் தாயராகுங்கள். என்று அரசைக் கேட்டு வரு கின்றோம். எமது மக்களின் அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளிவைக்க இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைத் தாருங்கள்; அது பற்றிய பேச்சுவார்த்தையை நடத்துங்கள் என்று கேட்டோம். அது பற்றி எம்மிடம் பேசுவதற்கு அரசு தயாராய் இல்லை ; ஆனால் நாம் கேட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றி மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பேசி வருகின் றார்கள். நாம் சமர்ப்பித்த யோசனை கள் குறித்து எம்மிடம் பேச்சுவார்த் தைகளை ஆரம்பிப்பதற்கோ அரசு தயார் நிலையில் இல்லை.என்றால் பின்னர் எவ்வாறு அதனை அவர்கள் எமக்குத் தரப்போகிறார்கள்" என்று எழிலன் கேட்டார். (25)

# நீதிபதிகளுக்கான அச்சுறுத்தலை விவாதிக்க கட்சித்தலைவர்கள் கூட்டம்

### –அழைக்க வேண்டும் என்கிறார் ரணில்

(கொழும்பு)

நீதிபதிகளுக்கும் நீதிமன்ற அதி காரிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து ஆராய உடனடியாக கட்சித்தலைவர்களின் கூட்டமொன்றிற்கு அழைப்பு விடுக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டு கோள விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்: நீதிமன்ற நடவடிக் கைகள் தொடர்பான அதிகாரம் பாரளுமன்றத்திற்கே உள்ளமை யால் நீதிமன்றத்தில் பணிபுரியும் அதிகாரிகளைப் பாதுகாக்க வேண் டிய பொறுப்பும் பாராளுமன்றத் திற்கே உரியதெனவும் அவர் கூறி உள்ளார்.

நீதவான்களும் ,மேல் நீதிமன்ற நீதிபதிகளும் பாதாள உலகக் கோஷ்டிகளின் வழக்குகளை விசாரித்து வருவதனால் இவர் களுக்கு விடுக்கப்பட்டுவரும் மரண அச்சுறுத்தல்கள், ஒட்டு மொத்த நீதிமன்ற நடவடிக்கை தளர்வடை வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் ரணில் விக்கிரம சிங்க மேலும் கூறி உள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்து இதற்கான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள் ளப்படவேண்டும என்வும் அவர் கூறியுள்ளார்.

# பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக இ.த.அதிகாரசபையே இருக்கவேண்டும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பா.உ. தெரிவிப்பு

சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையி லான பேச்சுக்களை ஆரம்பிப் பதற்கான அடிப்படையாக இடைக் கால தன்னாட்சி அதிகார சபை யோசனை இருக்க வேண்டும் என்று சிறிலங்கா பாராளுமன்றத் திற்கான தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் வலியுறுத்தி யுள்ளார்.

சமூக பொருளாதார அபிவி ருத்தி நிலையத்தில் இடம்பெற்ற நிலையான தீர்விற்கான அதிகார பரவலாக்கம் என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வதில்லை என்று குற்றசாட்டு எழுந்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது.

அரசாங்கம் தனது நிலை ப்பாட்டில் சிறிதளவு கூட விட்டுக் கொடுக்க முன்வராத நிலையே தற்போது காணப்படுகின்றது.

இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் புதியவை அல்ல. ஏற்கனவே முன்மொழியப்பட்ட திட்டமே இது ஆனாலும் சிறிலங்கா அரசாங்கம் இதன் அன்படையில் பேசுவதற்கு இதுவரை ஒப்புதல் தெரிவிக்காமல் இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கனடாவில் நடைபெற்ற மாவீரர்பெற்றோர் கௌரவிப்பு



கனடாவில் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. இதில் பல நூற்றுக்கணக்கான மாவீரகுடும்பங்கள் கலந்து கொண்டன. இதில் பொறுப்பாளர்கள் பலர் உரையாற்றினார்கள். குறிப்பாக உலகத் தமிழர் பொறுப்பாளர் நாவலன் மாவீரரின் மகத்தான சாதனைகள் பற்றி உரையாற்றினார். பின்னர் ஒவ்வொரு மாவீரரின் பெற்றோரும் தத்தமது பிள்ளைகளைப்பற்றி உரையாற்றினார்கள். அதன் பின்னர் ஒவ்வொரு மாவீரரின் பெற்றோரும் பிரதேசப் பொறுப்பாளர்களால் புலிச்சின்னம் பதிக்கப்பட்ட கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்,தகவல் :எழிலன்)

# மாவீரர் நாளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தளிர் சிறுவர் சேமிப்புக் கணக்கு

தமிழீழ தேசிய மாவீரர் நாளில் பிறக்கும் குழந்தைகளுக்கு நினைவுப் பரிசாக கிராமிய அபிவிருத்தி வங்கி தளிர் சிறுவர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்க உள்ளது. இந்த வகையில் 27 ஆம் திகதி அதிகாலை 12.01 மணியில் இருந்து இரவு 11.59 மணிவரையில் பிறக்கும் குழந்தைகள் இத்திட்டத்தில் பயன் பெறுவார்கள்.

இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த குழந்தைகளின் பெற்றோர்கள், கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையுடனும், வவுனியா பெற்றோர்கள் , கிராமிய அபிவிருத்தி வங்கியின் கனகராஜன்குளக் கிளையுடனும், மற்றும் திருகோணமலை மாவட்டப் பெற்றோர்கள் சாம்பூரில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்திவங்கிக்கிளையுடனும், மட்டக்களப்பு மாவட்டப் பெற்றோர்கள் கரடியன் ஆறு கிராம அபிவிரு[illegible]தி வங்கிக்கிளையுடனும் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மாவட்ட பெற்றோர்கள் அருகில் உள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையுடனும் தொடர்பு கொள்ளுமாறு பொது மேலாளர் தெரிவித்துள்ளார். (கு)

# நீதிபதியொருவர் கொலை செய்யப்படுமளவிற்கு நாட்டில் நீதித்துறை சீர்குலைந்து விட்டது!

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

அதி உயர் அதிகாரம் கொண்ட நீதிபதியொருவர் படுகொலை செய்யப்படுமளவிற்குநாட்டில் நீதித்துறை பெருமளவு சீர் குலைந்துள்ளது. என பிரதம நீதியரசர் சரத் என்.டீ.சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், இந்த கொலை தனிப்பட்ட ஒரு நபருக்கு ஏற்பட்ட பாதிப்பு அல்ல, அனைத்து நீதித்துறையும் எதிர்நோக்கி வருகின்ற சவால்களின் வெளிப்பாடாகும்எனச் சுட்டிக் காட்டிய அவர், இந் நிலையில் சட்டத்தை நிலைநாட்ட சகல பிரிவினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தியுள்ளார். பல காலமாக இடம்பெற்றுவரும் தொடர் குற்றச்சம்பவங்களின் விளைவே நீதிபதியின் கொலையாகும். இந்த குற்றச் செயல்களைப்பொலிசார் விசாரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், பாதாள உலகக் குழு தற்போது பாரிய அளவிற்கு பலம் பெற்றுள்ளது. அந்தப் பலம் உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொல்லும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. நீதிமன்றத்தை விமர்சிப்பது தற்போது வாடிக்கையாகி விட்டது. நீதித்துறைக்கு பல்வேறு தரப்பும் சவால் விடுகின்றது. நீதிமன்றம் அவமதிக்கப்பட்டு வருகின்றது. இப்படியான சூழ்நிலையில் நீதிபதியை ஏன் கொல்ல முடியாது? என பாதாள உலகக் குழு நினைக்கலாம் தானே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மாவீரர்...

இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் முக்கியமாக மாவீரர் தின நிகழ்வு தொடர்பாகவும், ஏ-9 சாலை தொடர்பாகவும், உரையாடப்பட்டதுடன் பூந்தோட்டத்தில் பொலிசாரினால் புதிதாக அமைக்கப்படும் மூன்று காவலரண்கள் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில்அமைந்திருப்பதாகவும் இவற்றினை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தாம் கேட்டதாகவும் தர்மேந்திரா தெரிவித்தார் எனினும் பொலிசார் சந்திப்பில் கலந்து கொள்ளாததால் இது தொடர்பாக முடிவு எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் அடுத்தவாரம் இடம்பெறும் கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரது தரப்பில் தகவல் தந்த பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ பொதுவான விடயங்கள் ஆரயப்பட்டதாகவும், சுமுகமாக சந்திப்பு முடிந்ததாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட பிரதான அதிகாரி கருத்துத்தெரிவித்தபோது இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பை புலிகள் கேட்டு கொண்டதற்கு அமைவாக ஏற்பாடு செய்ததாகவும், முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்கவில்லை என்றும் எதிர்வரும் வாரமே முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்டத்தின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா விளையாட்டுத் துறை பொறுப்பாளர் தமிழ்மாறன் இராணுவத்தினரதுதரப்பில் பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ கேணல் ஹத்துருசிங்க,கேணல்ராஜகுரு, கேணல் ரணசிங்க, கேணல் அஜித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.(21)

### பேருந்து....

பிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்து மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட வாகனத்தை ஓட்டிவந்த சாரதி பொலிசாரால் கைது செய்யப்பட்டார். (33,41)

### புலிகளுக்கெதிராக...

கள் நேற்றுச் செய்தி வெளியிட்டன. இந்தச் செய்தி தொடர்பாக செய்தியாளர்களுக்கு நேற்று மாலை விளக்கமளித்த அவர், இப்படியான சம்பவமொன்று நடைபெறவில்லை என முற்றாக மறுத்தார். இத்தகைய பிரச்சாரங்கள் திட்ட மிட்ட நடவடிக்கைகளாகும், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மாவீரர் தினம் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனைக்குழப்புவதற்காக மக்கள் மத்தியில் பொய் வதந்திகளை ஒரு சாரார் பரப்பி வருகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

### கிழக்கு...

ணுவமும் திடீர் எனச் சுற்றிவளைத்துத் தேடுதல் ஒன்றை நடத்தி ஒருவரைக் கைது செய்துகொண்டு சென்றுள்ளனர். நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரில் நடந்த இந்தச் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டவரிடம் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதாக மட்டக்களப்பு விசேட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதன்போது கைதானவர் மயிலம்பா வெளியைச் சேர்ந்த கணேசமூர்த்தி சசிதரன் (வயது 19) எனவும் இவர் தேநீர்சாலையொன்றில் உணவருந்திக்கொண்டிருந்தபோது கைதானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்தத் தேடுதல் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

இதன்போது மட்டக்களப்பு நகரிலும் புறநகர்ப் பகுதியிலும் உள்ள ஆறு வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடைபெற்றது.மட்டக்களப்பு நகரில் நடந்த சுற்றிவளைப்பின்போது தேசவிரோதிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மூத்த பத்திரிகையாளர் ஜீ.நடேசன் மற்றும் அவரது உறவினர் ஒருவரின் வீடு உட்பட மூன்று வீடுகள் சோதனை இடப்பட்டுள்ளன. (முன்னர் வந்த செய்தி உள்ளே...)

### கிளி.யில்...

தது. அத்தோடு கிளிநொச்சி உருத்திரபுரம் வீதி திருமுறிகண்டி, அக்கராயன் வீதி,கனகபுரம் வீதி, என்பனவற்றிலும் பாலங்களின் மேலாகவும் வீதிகளைக்குறுக்கறுத்தும் நீர் பெருக்கெடுத்து பாய்ந்தது. இதேவேளை திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் பிராதான சாலையில் அமைந்துள்ள பாரிய நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்ட இடத்தில் வீதியை குறுக்கறுத்து பெருமளவில் நீர் பாய்ந்ததால் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தது. அத்தோடு நேற்றுப்பிற்பகல் பெய்த கடும் மழையினால் கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் மக்களின் வீடுகள் வாணிப நிலையங்கள் என்பவற்றுக்குள் நீர் உட்புகுந்து தேங்கி நிற்பதையும் காணக்கூடியதாக இருந்த அதேவேளை திருமுறிகண்டிப் பகுதியில் வீடுகளுக்குள் நீர் புகுந்ததால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலையில் குடியேறியுள்ளனர்.

என்றுமில்லாதவாறு மழைநீர் கிளிநொச்சிப்பகுதியில் தேங்கி வீதிகளை குறுக்கறுத்துப் பாய்வதற்குப் படையினர் முன்னதாக அமைத்திருந்த மண் அரண்களும் சமதரைகளை ஆழப்படுத்தி மண்ணை அகழ்ந்து அரண்களுக்குப் பயன்படுத்தியதும் வடிகால் அமைப்பை சீர் குலைத்தமையுமே காரணமென மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ச.கு)

# பொதுமண்டபத்தில் புலிக்கொடி ஏற்றின் நடவடிக்கை எடுக்கத்தேவையில்லை

## வன்னி இராணுவத்தலைமையகம் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

இராணுவக் கட்டுபாட்டுப் பகுதியில் அரச காரியாலயங்களில் புலிகொடி பறக்க விட்டாலே இராணுவம் கவனத்தில் எடுக்க வேண்டும். பொது மண்டபத்தில் பறக்கவிடும் பட்சத்தில் இராணுவம் கவனிக்கத் தேவையில்லை. இவ்வாறு வன்னி இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. நேற்று வவுனியா முத்தையா மண்டபத்தில் மாவீரர்களின் பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றபோது அந்தப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருந்த இராணுவ அதிகாரி தமிழீழத்தேசியக்கொடி ஏற்றப்பட்டவுடன் தனது தலைமையகத்திற்கு அறிவித்தார். பொது மண்டபத்தில் கொடி ஏற்றப்பட்டு இருப்பதாகவும், இது அரச காரியாலயம் இல்லை என்று அறிவித்தபோது நடவடிக்கை எதனையும் எடுக்கவேண்டாம் என்று தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் வவு[illegible]யா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றமாவீரர் விளையாட்டுப் போட்டியின்போது புலிக்கொடி ஏற்றப்பட்டபோது இது போர் நிறுத்த மீறல் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இராணுவம் முறையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது (21)

# அரசின் சமாதானயோசனை சனவரியில் புலிகளிடம் சமர்ப்பிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு மாற்றாக அரசாங்கம் தயாரித்துள்ள யோசனை எதிர்வரும் ஜனவரி மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கவுள்ளதாகவும். இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க தரப்புச் செய்திகள் கூறுகின்றன. இந்த யோசனை தற்சமயம் அரசாங்கத்தின் சமாதான செயலகப்பார்வையில்உள்ளது இந்த நிலையில் சனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச்சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் யோசனைகளும் இந்த அரசாங்கத்தின் யோசனையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரே அது தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கபட்டுள்ளது. ஏற்கனவே இந்த யோசனை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படாது என உறுதி வழங்கப்பட்டுள்ள போதும் தற்சமயம் அது சமர்பிக்கப்படும் எனக் கூறப்படுவது சமாதானப் பேச்சுவார்த்தையைத்தாமதிக்கும் திட்டத்தின் ஒரு அங்கமே எனக் கருதப்படுகிறது. (32)

### தமிழர்..

லெப்.கேணல் நகுலன்,குட்டிசிறி மோட்டார்பீரங்கிப்படையணித் தளபதி பவநிதியும் ஏற்றிவைத்தனர். மலர் மாலையினை வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி கிங்ஸ்லி தாஸ் அணிவித்தார். வரவேற்புரையினை இராமநாதபுர மாகாவித்தியாலய ஆசிரியை சிறிகௌரியும் தலைமையுரையினை தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த பொன்னுத்துரையும் வழங்கினார்கள். சிறப்புரைகளை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி அரசியல் பொறுப்பாளர் அமிர்தாப்பும்,குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கோபாலும் வழங்கினார்கள். கலைநிகழ்வுகளைத் தொடர்ந்து மாவீரரின் பெற்றோருக்கு தென்னம்பிள்ளைகளும் வழங்கப்பட்டன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை போக்குவரத்து ஊழியர் சங்கத்தால் பணியாளர்களது மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று மு.ப.11.00 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பருத்தித்துறை சாலையில் பணிபுரியும் பெற்றோர் மற்றும் உரித்தாளர்களைக் கௌரவிக்கும் வகையில் கருத்துரைகள் இடம் பெற்றன.

போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் புவனேசுவரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ் வில் பாஸ்கரன், மகேந்திரன், கந்தசாமி, ரகுநாதன்,கதிரித்தம்பி ஆகிய பணியாளர்கள் மாவீரர்கள் நாள் சிறப்புக் குறித்து உரையாற்றினர். அத்துடன் யாழ் மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையாலன் தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆகியோர் சிறப்புக் கருத்துரைகளை வழங்கினர்.

வவுனியா மாவட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். நேற்று வவுனியா முத்தையா மண்டபத்தில்நகரபுரத்து மாவீரர்களின் பெற்றோர் 400 பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தலைமையில் காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது நிகழ்வில் முன்னதாக வவுனியா புகையிரத வீதியில் இருந்து பெற்றோர்கள் மேளவாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு முத்தையா மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின தமிழீழத்தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் அலை ஏற்றினார் பொதுச் சுடரினை வன்னி மாவட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர் எஸ். செந்தில் நாதன் ஏற்றினார்.

தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன. (12)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.